# நிதித்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

2024-2025

மானியக் கோரிக்கை எண்.16

தங்கம் தென்னரசு

நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர்

©

தமிழ்நாடு அரசு

2024

# பொருளடக்கம்


| வரிசை எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | முகவுரை | 1 |
| 2 | நிருவாகத் துறைகள் | |
| | அ. கருவூலக் கணக்குத் துறை | 27 |
| | ஆ. சிறு சேமிப்புத் துறை | 57 |
| 3 | தணிக்கைத் துறைகள் | |
| | அ. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை | 72 |
| | ஆ. கூட்டுறவுத் தணிக்கைத் துறை | 86 |
| | இ. மாநில அரசுத் தணிக்கைத் துறை | 94 |
| | ஈ பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை | 102 |
| | உ. இந்து சமய அறநிறுவனங்களின் தணிக்கைத் துறை | 117 |
| 4 | இதர முகமைகள் | |
| | அ. தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் | 130 |
| | ஆ. தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் (TNIFMC) | 138 |
| | இணைப்புகள் | |

## கொள்கை விளக்கக் குறிப்பு

## மானியக் கோரிக்கை எண்.16

## நிதித் துறை

## 2024-2025-ஆம் ஆண்டிற்கான
## கொள்கை விளக்கக் குறிப்பு

**முகவுரை:**

**“இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த**
**வகுத்தலும் வல்ல தரசு.”**

**(குறள் 385)**

முறையான நிதி ஆதாரங்களை வகுத்து, அரசாங்கக் கருவூலத்திற்கான வருவாயைப் பெருக்கி, அதைப் பாதுகாத்துத் திட்டமிட்டுச் செலவிடுவதுதான் திறமையான நல்லாட்சிக்கு இலக்கணமாகும்.

2. தமிழ்நாடு அரசின் பொது நிதியை முறையாகவும் செம்மையாகவும் நிருவகிக்கும் பெரும் பொறுப்பினை ஏற்றிருக்கும் நிதித் துறை

அந்நோக்கங்களை எய்திடும் வகையில் தனது செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

நிதித்துறையின் முக்கியச் செயல்பாடுகள்:

i. இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 202-இன்படி அரசின் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல்.

ii. மாநிலத்தின் கருவூலக் காப்பாளர் என்ற முறையில் தமிழக அரசின் பொது நிதியை மேலாண்மை செய்தல்.

iii. மாநில அரசின் நிதி மேலாண்மை தொடர்பான கொள்கைகளை உருவாக்குதல்.

iv. அரசின் வரவுகளையும் அதற்கேற்றவாறு செலவுகளையும் சீராகப் பராமரித்தல்.

v. பல்வேறு துறைகளின் செலவினக் கருத்துருக்களை மதிப்பிட்டு கூர்ந்தாய்வு செய்தல்.

vi. உட்கட்டமைப்பு வளர்ச்சிக்கு நிதியளிப்பதற்கான மாற்று நிதி ஆதாரங்களைக் கண்டறிதல்

**தொலை நோக்குத் திட்டம்:**

3. மக்கள் நலத் திட்டங்களுக்கும் மாபெரும் உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கும் முன்னுரிமை அளித்து, திறன்மிக்க நிதிமேலாண்மையுடன், மாநிலத்தின் நிதிநிலையின் வளத்தையும் பேணிப் பாதுகாத்து செயல்படுத்துவதே நிதித்துறையின் தொலைநோக்குத் திட்டமாகும். பெருகிவரும் சவால்களைச் சமாளிப்பதற்கு, தொழில்நுட்பத் திறன்களுடன் கூடிய நவீன நடைமுறைகளை இத்துறை கடைப்பிடிக்கிறது. ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தின் பேரியல் கூறுகளான மொத்த வரவுகள் மற்றும் செலவினங்களை நிதித்துறை நிருவகிக்கிறது.

4. இந்தப் பரந்த கட்டமைப்பிற்குள், செலவினத்திற்கான முடிவுகள் குறித்து பிற துறைகளுக்கு அதிக தன்னதிகாரம் வழங்குவதுடன் அதற்கான பொறுப்பினையும் கணிசமாக உயர்த்துவதை இத்துறை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், இத்துறையானது அரசின் நிதியை திறம்படப் பயன்படுத்துவதை

உறுதிசெய்வதுடன், தணிக்கை முறையை மிகவும் வலுவானதாகவும் செயல்திறன்மிக்கதாகவும் மாற்றுகிறது. இந்த நோக்கங்களை அடைய பல்வேறு முன்முயற்சிகள் செயல்படுத்தப்படும்:

- கருவூல அமைப்பினை வலுப்படுத்துதல்.
- ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டத்தை மேம்படுத்துதல் மற்றும் அதன் முழு பயன்பாட்டை உறுதி செய்தல்.
- ஏனைய துறைகளுக்கும் முகமைகளுக்குமான நிதிப்பாய்வினைக் கண்காணித்தல்.
- தணிக்கை முறைகளை வலுப்படுத்துதல்.
- நவீன வரவு செலவுத் திட்ட செயல்முறைகளை ஏற்றுக்கொள்ளுதல்.
- பொறுப்புடைமை மற்றும் உற்பத்தித்திறனை அதிகரித்தல்.
- கொள்முதல் செயல்முறையின் வெளிப்படைத் தன்மை மற்றும் செயல்திறனை மேம்படுத்துதல்.

**சிறப்பு முயற்சிகள்**

5. மாநிலத்தின் சிறந்த நிதி மேலாண்மைக்காக இத்துறை பின்வரும் சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

**(i) பொருளாதார வல்லுநர் குழு**

உலகின் தலைசிறந்த 5 பொருளாதார வல்லுநர்களைக் கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவினை கடந்த 2021ஆம் ஆண்டு ஜூன் மாதம் அரசு அமைத்தது.

இதுவரை இந்தப் பொருளாதார ஆலோசனைக் குழுவின் ஆலோசனைக் கூட்டம் 2021-2024 ஆம் ஆண்டுகளில் நான்கு முறை மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் நடைபெற்றது.

கூடுதலாக, இந்தக் குழுவின் உறுப்பினர்கள் மாநிலத்திற்கு வருகை தந்து பல்வேறு துறைகளுடன்

கலந்தாலோசித்து தேவையான ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்.

மக்களைத் தேடி மருத்துவம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், மகளிர் உரிமைத் தொகை, இல்லம் தேடிக் கல்வி போன்ற பல்வேறு நலத் திட்டங்களுக்கும், 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை அடைவதற்கான வழிகள், மின்துறையில் சீர்திருத்தங்கள் போன்ற பல்வேறு திட்டங்களுக்கு இக்குழு உறுப்பினர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர். மேலும், இப்பொருளாதார ஆலோசனைக் குழுவின் வல்லுநர்களில் ஒருவரான திரு. அரவிந்த் சுப்பிரமணியன் தலைமையில் எரிசக்தித் துறை செயல்பாட்டில் நிலைத்த தன்மையை மேம்படுத்த பரிந்துரைகள் வழங்க துணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

**(ii) புதிய சொத்து மேலாண்மை அமைப்பு**

6. 2022-2023 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், "அரசு சொத்துக்களை முறையாக கணக்கிட அனைத்து அரசுத் துறைகளில் இருக்கும் அசையும் மற்றும் அசையா சொத்துக்களின் விவரங்களை சேகரித்து, அவற்றின் பயன்பாட்டை கண்காணிக்க ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டத்துடன் (IFHRMS) இணைத்து ஒரு சொத்து மேலாண்மை மென்பொருள் (Asset Management Software) வரும் ஆண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்படும்" என அறிவிக்கப்பட்டது.

7. மேற்கூறிய அறிவிப்பின் அடிப்படையில், அரசுத் துறைகளில் உள்ள அனைத்து சொத்துக்களின் வாழ்க்கை சுழற்சியினை கண்காணித்து வளப் பயன்பாட்டை மேம்படுத்த மேகக் கணினியம் அடிப்படையிலான சொத்து மேலாண்மை மென்பொருளானது (Cloud Based Asset Management Software) உருவாக்கப்பட்டுள்ளது.

8. இந்த மென்பொருள் மூலம் துறைகளின் கட்டுப்பாட்டில் உள்ள சொத்துகளின் விவரப்பட்டியலை இணைய வாயிலாக நிகழ்நிலையில் பெற இயலும். இதன் மூலம், சொத்துக்களை உரிய கணக்குப் பதிவிற்கும் மற்றும் சரியான நேரத்தில் பராமரிப்பு மேற்கொள்வதையும் உறுதிப்படுத்தவும் இயலும்.

**(iii) மின்-கொள்முதல் (e-procurement)**

9. மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 2022-2023 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் வெளியிட்ட அறிவிப்பின்படி, 01.04.2023 முதல் தமிழகத்தில் உள்ள அனைத்து கொள்முதல் துறைகள் / நிறுவனங்களுக்கு மின் கொள்முதலுக்கான புதுப்பிக்கப்பட்ட இணையதளம் https://tntenders.gov.in கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

10. இது நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர், 2023-2024 ஆம் நிதியாண்டில் இந்த இணையதளத்தில் 1.69 இலட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள, 1.75 இலட்சம்

எண்ணிக்கையிலான ஒப்பந்தப் புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளன.

11. மின்-கொள்முதல் நடவடிக்கைகளை வலுப்படுத்தும் வகையில், 2024-2025 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில்,

***"இ-கொள்முதல் இணையதளத்தில் மின்னணு வங்கி உத்தரவாத முறையை அரசு அறிமுகப்படுத்தும்"*** என அறிவிக்கப்பட்டது.

12. மேற்கண்ட அறிவிப்பின் அடிப்படையில், அரசாணை (நிலை) எண் 84, நிதித் (கொள்முதல் பிரிவு) துறை, நாள் 26.02.2024-ன் படி ஆணைகள் வெளியிடப்பட்டு, அதில்,

(அ) மின்னணு வங்கி உத்தரவாதத்தை (e-Bank Guarantee) செல்லுபடியாக்கும் வங்கி உத்தரவாதமாக ஏற்றுக்கொள்வதை அனுமதித்தும்

(ஆ) மின்னணு வங்கி உத்தரவாதத்தை (e-Bank Guarantee) சமர்ப்பிக்கும் வசதியை மின் கொள்முதல் இணையதளத்தில் (https://tntenders.gov.in) ஒருங்கிணைத்தும்

(இ) தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் சட்டம், 1998-இன் பிரிவு 16 (b) இன் படி மின்னணு வங்கி உத்தரவாதத்தை (e-Bank Guarantee) அங்கீகரிக்க, தேசிய மின் ஆளுமை சேவைகள் லிமிடெட் (NeSL)-ஐ ஈடுபடுத்தவும், ஆணையிடப்பட்டது.

13. இந்த இணையதளம் தேசிய மின் ஆளுமை சேவைகள் நிறுவனம் (NeSL) மின்-வங்கி உத்தரவாத (e-Bank Guarantee) இணையதளத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இது ஒப்பந்ததாரர்களுக்கு இணைய வழி வங்கி உத்தரவாதத்தை அளித்திட உதவுகிறது. இந்த நடைமுறை நாட்டிலேயே முதல் முறையாக நமது மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

14. மேலும், 2024-2025 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில்,

***"இந்த முயற்சிகளின் முன்னேற்றமாக, அனைத்து துறைகளின் ஒப்பந்ததாரர்களின் மின்னணு பதிவு, இ-சேவை மையங்கள் வாயிலாக 01.07.2024 முதல் தொடங்கும்"*** என அறிவிக்கப்பட்டது.

15. மேற்கண்ட அறிவிப்பின் அடிப்படையில், அரசாணை (நிலை) எண். 83, நிதித் (கொள்முதல் பிரிவு) துறை, நாள் 26.02.2024-ன் படி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வாணையில் இ-சேவை இணையதளம் மூலம்

(அ) 01.07.2024 முதல் இ-சேவை இணையதளம் வழியாக ஆன்லைன் பதிவு மற்றும் ஒப்பந்ததாரர்களின் பதிவு புதுப்பித்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

(ஆ) மின்-ஒப்பந்ததாரர் பதிவு மின்-கொள்முதல் இணையதளத்துடன் (https://tntenders.gov.in) ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

(இ) ஒப்பந்ததாரர் அமைப்பைப் பதிவுசெய்துள்ள அனைத்துத் துறைகளும், தமிழ்நாடு மின் ஆளுமை முகமையுடன் (TNeGA) ஒருங்கிணைந்து தங்கள் துறைக்கான தனிப்பயனாக்கப்பட்ட செயல்முறையினை உருவாக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## (iv) அதிக நிதிச்சுமையை ஏற்படுத்தும் வழக்குகளுக்கான மேலாண்மை அமைப்பு

16. அரசுக்கு அதிக நிதிச்சுமைகளை உருவாக்கக்கூடிய வழக்குகள் குறித்து அரசிற்கு வழிகாட்டுவதற்காக அமைக்கப்பட்டுள்ள உயர் அதிகாரம் கொண்ட வழக்கு ஆலோசனை மற்றும் மேற்பார்வை குழு இதுவரை நடத்தியுள்ள 17 கூட்டங்களில், 15 துறைகளைச் சார்ந்த 37 எண்ணிக்கையிலான அதிக நிதிச்சுமையுள்ள வழக்குகளுக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளது.

17. மேலும், அரசிற்கு அதிக நிதிச்சுமையை உருவாக்கக்கூடிய வழக்குகள் அனைத்தையும் கூர்ந்து கண்காணிக்கும் பொருட்டு ஒருங்கிணைந்த நீதிமன்ற

வழக்குகள் கண்காணிப்பு அமைப்பில் (ICCMS) இதற்கென தனியாக வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## (v) நிதித் (பொதுத்துறை நிறுவனங்களின் மாநிலக் கழகம்) துறையை வலுப்படுத்துதல்

18. நிதித் (பொதுத்துறை நிறுவனங்களின் மாநிலக் கழகம்) துறையை வலுப்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக, அரசாணை எண்.141, நிதித் (பொ.மா.க) துறை, நாள் 24.5.2022-இன் படி, M/s E&Y ஆலோசகர் நிறுவனத்தை ஈடுபடுத்தி, ஒரு திட்ட மேலாண்மை பிரிவு (PMU) அமைக்கப்பட்டது. இந்த திட்ட மேலாண்மை பிரிவு, மாநிலத்தில் செயல்படும் பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் சட்ட வாரியங்களின் முந்தைய மற்றும் தற்போதைய செயல்திறன் அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளது. அதன் அடிப்படையில், மாநில பொதுத்துறை நிறுவனங்களை மேம்படுத்த, ஒருங்கிணைக்க மற்றும் புதிய வணிகப் பரப்புகளுக்கு விரிவடைய எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

**(vi) நபார்டு திட்ட கண்காணிப்புப் பிரிவு**

19. நபார்டு வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் செம்மையாக, உரிய காலத்தில் நிறைவேறுவதை உறுதிசெய்யும் நோக்கத்தில், தற்போது நிலுவையில் உள்ள திட்டங்களின் முன்னேற்றத்தை தொடர்ந்து கண்காணிக்கவும், நபார்டு மற்றும் பிற நிதி நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு நிதியுதவியை விரைந்து விடுவிப்பதை உறுதிப்படுத்தவும், ஒரு "நபார்டு திட்ட கண்காணிப்புப் பிரிவு" ஏற்படுத்தப்பட்டு நபார்டு உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் கண்காணிக்கப்படுகின்றன.

**(vii) தன்னதிகார வரவு செலவுத் திட்டம்**

20. வரவு செலவுத் திட்ட உருவாக்கத்தில் நவீன நடைமுறைகளை அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன், 2022-2023 ஆம் ஆண்டு முதல் பின்வரும் ஐந்து மானியங்களுக்கான கோரிக்கைகளில் தன்னதிகார வரவு செலவுத் திட்டம் நடைமுறையிலுள்ளது.

(i) மீன்வளம் மற்றும் மீனவர் நலன்

(ii) பால்வளம்

(iii) சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம்

(iv) குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள்

(v) மாற்றுத் திறனாளிகள் நலன்

21. இத்திட்ட முறையானது, விரைவாக முடிவெடுத்தல், மேம்படுத்தப்பட்ட செயல்முறை, செலவினங்கள் குறைப்பு மற்றும் அதிக பொறுப்புணர்வை உறுதி செய்யும். அதே வேளையில், கால நேர விரயத்தை தவிர்ப்பதற்கும் துறைகளுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கவும் முயல்கிறது.

22. மேற்கூறிய ஐந்து மானியக் கோரிக்கைகளுக்கான தன்னதிகார வரவு செலவுத் திட்டம் 2024-2025 ஆம் நிதியாண்டிலும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த முன்னோடி செயல்முறையை உறுதிப்படுத்திய பிறகு, வரும் காலங்களில் மற்ற மானியக்கோரிக்கைகளுக்கும் படிப்படியாக தன்னதிகார வரவு செலவுத் திட்ட

நடைமுறையை விரிவாக்கம் செய்ய பரிசீலனை செய்யப்படும்.

### (viii) வரவு செலவுத் திட்டம் குறித்த குடிமக்களுக்கான கையேடு

23. வரவு செலவுத் திட்ட மதிப்பீடு வெளியீடுகளில், ஒரு புதிய முயற்சியாக, வெளிப்படைத் தன்மையை மேம்படுத்தும் நோக்கத்துடன் முதன்முறையாக, 2022-2023 ஆம் நிதியாண்டிற்கான 'வரவு செலவுத் திட்டம்' குறித்த குடிமக்களுக்கான கையேடு வெளியிடப்பட்டது. வரவு செலவுத் திட்டத்தின் முக்கிய அம்சங்களை மக்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் எளிமையான வடிவிலும் வரைபட வடிவிலும் இந்த ஆவணம் வெளிப்படுத்தியுள்ளது. இந்த ஆவணம் வரவு செலவுத் திட்டம் குறித்த குடிமக்களின் விழிப்புணர்வை அதிகரிக்கவும், அரசின் நிதிநிலை குறித்த அறிவார்ந்த விவாதங்களை ஊக்குவிக்கவும் உதவிடும். இந்த ஆவணம் 2024-2025 ஆம் நிதியாண்டிலும் தொடர்ந்து வெளியிடப்பட்டுள்ளது.

## (ix) பன்னாட்டு நாணய நிதியத்தின் தொழில்நுட்ப உதவி

24. மாநிலத்தின் பொது நிதி நிருவாகத்தில், குறிப்பாக வரவு செலவுத் திட்ட மதிப்பீடு உருவாக்கம் மற்றும் நிதி இடர் மேலாண்மை ஆகியவற்றில் சீர்திருத்தங்களைக் கொண்டு வர பன்னாட்டு நாணய நிதியத்துடன் நிதித்துறை இணைந்து செயல்பட்டு வருகின்றது.

பொதுநிதி நிருவாக சீர்திருத்த நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்காக, பேரியல் நிதி பிரிவு, நிதி இடர் மேலாண்மை பிரிவு மற்றும் கடன் மற்றும் நிதி ஆதார மேலாண்மை பிரிவு என மூன்று சிறப்புப் பிரிவுகள் நிதித்துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக, 2022-2023 ஆம் நிதியாண்டிலிருந்து வெளியிடப்பட்ட வரவு செலவுத்திட்டம் குறித்த குடிமக்களுக்கான கையேடு மற்றும் ஐந்து மானியக் கோரிக்கைகளுக்கான தன்னதிகார வரவு செலவுத் திட்ட நடைமுறையானது 2024-2025 ஆம் நிதியாண்டிலும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும்,

நிதித்துறையானது IMF-SARTTAC அதிகாரிகளுடன் தனிப்பட்ட சந்திப்புகள் / பயிற்சி அமர்வுகளில் தீவிரமாக ஈடுபட்டு, 2022-2023 ஆம் ஆண்டில் பணியாளர்களுக்கு ஆர்வம் ஏற்படுத்தும் வகையில் துறை வாரியான நிதி இடர் பகுப்பாய்வு செய்யத் தொடங்கியுள்ளது. இதே போன்று, 2022-2023 ஆம் ஆண்டில் பேரியல் நிதி அளவுருக்களுடன் கூடிய ஒரு மத்திய கால நிதிக் கட்டமைப்பைத் தயாரிப்பதற்கான செயல்முறையும் நிதித்துறையால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

**(x) சிறப்புப் பணிக்குழு**

25. பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படாமல் 31.03.2023 அன்று வரை வங்கி கணக்குகளில் வைக்கப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களுக்கான கணிசமான நிதி, சிறப்புப் பணிக்குழுவால் கண்டறியப்பட்டு அரசுக் கணக்கில் சேர்க்கப்பட்டது. மேலும், 31.03.2024 வரையான பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படாத நிதியினைக் கண்டறிந்து திரட்டும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தொடர்ச்சியான முயற்சி மூலம், சிறப்புப்

பணிக்குழு அரசு நிறுவனங்களுக்குத் தேவையான வங்கிக் கணக்குகளின் எண்ணிக்கை உரிய அளவில் அறுதி செய்யப்படும்.

### (xi) கருவூலக் கணக்குத் துறை, ஓய்வூதிய இயக்குநரகம், சிறு சேமிப்பு இயக்குநரகம் மற்றும் அரசு தரவு மையம் ஆகியவற்றின் மறுசீரமைப்பு

26. கருவூலக் கணக்குத் துறை, ஓய்வூதிய இயக்குநரகம், சிறுசேமிப்பு இயக்குநரகம் மற்றும் அரசு தரவு மையம் ஆகியவற்றின் மறுசீரமைப்பு குறித்து விரிவான ஆய்வு நடத்தும் நோக்கத்துடன் உரிய ஆலோசனை சேவைகள் நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

கருவூலக் கணக்குத் துறை, அரசு தரவு மையம், சிறு சேமிப்பு இயக்குநரகம் மற்றும் ஓய்வூதிய இயக்குநரகம் ஆகியவற்றின் இணைப்புக்கான அறிக்கையை ஆலோசனை நிறுவனம் சமர்ப்பித்துள்ளது. அந்த அறிக்கையின் அடிப்படையில் இணைப்புக்கான விரிவான முன்மொழிவு அரசின் பரிசீலனையிலுள்ளது.

## (xii) தமிழ்நாடு கருவூல விதித்தொகுப்பை திருத்தம் செய்தல் மற்றும் புதுப்பித்தல்

27. தமிழ்நாடு கருவூல விதித்தொகுப்பு I மற்றும் II, கணக்குத் தொகுப்பு I மற்றும் II, சம்பளம் மற்றும் கணக்குகள் கையேடு ஆகிய நூல்களை தற்போதைய நடைமுறைக்கு ஏற்றவாறு திருத்தம் செய்து மேம்படுத்துவதற்கும் அரசு அனுமதி வழங்கியது. இந்தப்பணி இந்திய பட்டய கணக்காளர் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தப்பணி இந்நிறுவனத்தின் கணக்கு மற்றும் ஆராய்ச்சி பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பின்வரும் கருவூல செயல்முறைகளுக்கான வரைவு அறிக்கையை நிறுவனம் சமர்ப்பித்துள்ளது.

- வரவினங்கள்
- ஓய்வூதியப் பலன்கள்
- பொது
- கடன்கள் மற்றும் முன்பணங்கள்

- வைப்புத்தொகை
- கருவூலக் காப்பறை செயல்பாடுகள்
- மூலதனச் செலவு
- செலவினங்கள்
- மாநில கணக்காயர்
- வரவு செலவுத் திட்டம்

28. மேற்காணும் கருவூல செயல்முறைகளை கொண்ட ஒரு சிறப்புக் குழு, ஆராய்ந்து திருத்தங்கள், நீக்குதல்கள் மற்றும் தக்கவைப்புகளுக்கான பரிந்துரைகளை வழங்கி கருவூல விதிகளை துல்லியமாகவும், விடுபாடுகள் இல்லாமலும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

29. இதைத் தொடர்ந்து முதற்கட்ட அறிக்கை, கருவூலக் குழு விரிவான மதிப்பாய்வை மேற்கொண்டு, அந்த அறிக்கையின் மீதான கருத்துகள் மற்றும் திருத்தங்கள், மீண்டும் இந்திய பட்டயக் கணக்காளர்கள்

நிறுவனத்தின் கணக்கியல் ஆராய்ச்சி அறக்கட்டளைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அந்நிறுவனத்திடம் இருந்து இறுதி அறிக்கையைப் பெற்று விதித் தொகுப்புகள் புதுப்பிக்கப்படும்.

**(xiii) பொது மற்றும் கடன் மேலாண்மை**

30. துரிதமான நிதி மேலாண்மை (Cash Management) மற்றும் கடன் நிலைத்தன்மை (Debt Sustainability) ஆகியவையே சிறந்த நிதி மேலாண்மையின் தூண்கள் ஆகும். இத்துறை, தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பல்வேறு துறைகளுக்கு அவர்களின் தேவைக்கேற்ப உரிய நேரத்தில் நிதி விடுவிப்பதை உறுதி செய்வதன் மூலம் நிதியினைப் பயன்படுத்தாமல் செயல்படுத்தும் நிறுவனங்கள் வங்கிக் கணக்குகளில் வைத்திருப்பதைத் தவிர்க்க முடிகின்றது.

மேலும், இந்த அரசு அறிமுகப்படுத்தியுள்ள பொது நிதிக் கண்காணிப்பு அமைப்பு (PFTS), 13 துறைகளில், 36 முக்கியத் திட்டங்களில் நிதியினை விடுவிப்பதிலிருந்து

பயனாளிகளின் வங்கிக் கணக்கில் அந்நிதி சென்று சேரும்வரை கண்காணிக்க முடியும். மேலும், கருவூலத்திலிருந்து நேரடியாக நிதி விடுவிக்கப்படும் நுட்பத்தை, 17 துறைகளில், 59 திட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம், நிதியினை கருவூலத்திலிருந்து நேரடியாக ஒப்பந்ததாரருக்குச் செலுத்தும் வகையில் வழிவகுத்துள்ளது. இத்தகைய முயற்சிகளால், திட்டங்களின் செயல்படுத்தும் வேகத்திற்கு ஏற்றார்போல் அரசு நிதி விடுவிக்கப்படுவது மட்டுமின்றி, அரசு தேவைக்குமேல் கடன் வாங்காமல் தமது வட்டிச் செலவினத்தையும் குறைக்க உதவுகின்றது.

### (xiv) தமிழ்நாடு நிதித்தரவு பகுப்பாய்வு மையம் (TNFDAU)

31. நோக்கம்: நிகழ்நேர முன்னேற்ற அறிக்கைகளை (IFHRMS லிருந்து கிடைக்கும் தரவு மற்றும் வணிக வரிகள், GSTN, பதிவுத் துறை, கலால் துறை, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, போக்குவரத்து துறை போன்ற IFHRMS க்கு வெளியே உள்ள தரவுகளைப்) பயன்படுத்தி,

ஒரு அமைப்பை வடிவமைத்தல், மேம்படுத்துதல், பராமரிப்பது மற்றும் பயனரின் தேவைகளுக்கு ஏற்ப தரவு காட்சிப்படுத்தல்.

இப்பகுப்பாய்வு, இணையம் / அலைபேசிகள் (அனைத்து வடிவ காரணிகள் மற்றும் தெளிவுத்திறன் ஆகியவற்றிற்குப் பதிலளிக்கக்கூடிய வடிவமைப்பு) மூலம் நிகழ்நேரத் தரவை வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது, மேலும், அனைத்து தரவு மூலங்கள் / துறைகளுடன் நிகழ்நேர ஒத்திசைவு இருக்கும் வகையில் வடிவமைக்கப்படுகிறது.

மேலும், மெட்ராஸ் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸின் வழிகாட்டுதலுடன் பல்வேறு துறைகளில் இருந்து தேவையான தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வுக்காக பயன்படுத்தப்படுகின்றன.

## நிதித்துறையின் அமைப்பு

32. பின்வரும் துறைகள் / முகமைகள் நிதித்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ளன:-

| | |
|---|---|
| **நிருவாகத் துறைகள்** | |
| i. | கருவூலக் கணக்குத் துறை |
| ii. | அரசு தகவல் தொகுப்பு விவர மையம் |
| iii. | சிறுசேமிப்புத் துறை |
| iv. | ஓய்வூதிய இயக்ககம் |
| **தணிக்கைத் துறைகள்** | |
| i. | உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை |
| ii. | கூட்டுறவுத் தணிக்கைத் துறை |
| iii. | மாநில அரசு தணிக்கைத் துறை |
| iv. | பால் கூட்டுறவு அமைப்புகளின் தணிக்கைத் துறை |
| v. | இந்து சமய அறநிறுவனங்களின் தணிக்கைத் துறை |
| **இதர முகமைகள்** | |
| i. | தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் (TNIDB) |
| ii. | தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் (TNIFMC) |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள துறைகளில், ஓய்வூதிய இயக்ககம் மற்றும் அரசு தகவல் தொகுப்பு விவர மையம் ஆகியவற்றின் செயல்பாடுகள் பற்றிய விளக்கம், கோரிக்கை எண்.50 "ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்" குறித்த கொள்கை விளக்கக் குறிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. ஏனைய துறைகளின் செயல்பாடுகள் பற்றிய விவரங்கள் இக்கொள்கை விளக்கக் குறிப்பில் இடம்பெற்றுள்ளன.

# கருவூலக் கணக்குத் துறை

**அறிமுகம்**

33. கருவூலங்கள் அரசாங்கத்தின் பழமையான செயல்பாட்டு அலகுகளில் ஒன்றாகும். முதலில் அவை ஆட்சியர் அலுவலகங்களின் ஒரு பகுதியாக செயல்பட்டன. 01.04.1962-இல் அவை தனித் துறையாக மறுசீரமைக்கப்பட்டு நிதித் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன.

34. கருவூலக் கணக்குத் துறையானது, கருவூலக் கணக்கு ஆணையரை துறைத் தலைவராகக் கொண்டு நிதித்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் 6 மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள், 6 சம்பளக் கணக்கு அலுவலகங்கள், 3 சார்-சம்பளக் கணக்கு அலுவலகங்கள், 38 மாவட்டக் கருவூலங்கள், 1 ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், 1 உதவி முத்திரைத் தாள் கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் 243 சார் கருவூலங்களுடன் கருவூலம் தொடர்பான பணிகளை மேற்கொண்டு வருகின்றன. கருவூலக் கணக்குத் துறை

அரசின் நிதி தொடர்பான பல்வேறு கருவூல செயல்பாடுகளை செய்கிறது. மேலும், நிதி தொடர்பான செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக பல்வேறு துறைகள், வாரியங்கள் மற்றும் பெரு நிறுவனங்களுக்கு தேர்ந்த மனிதவளத்தை வழுங்குகிறது.

**முதன்மையான பணிகள்**

- அரசின் அனைத்து வருவாய் மற்றும் செலவினங்களை கையாளுதல்
- 9.3 லட்சத்திற்கும் மேலான பணியாளர்களுக்கு சம்பளம் வழங்குதல்
- 7.05 இலட்சத்திற்கும் மேலான ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல்
- அரசின் திட்டங்களுக்கான நிதிகளை வழங்குதல்
- மாதாந்திர கணக்குகளை மாநிலக் கணக்காயருக்கு அனுப்புதல்
- நீதி / நீதிசாரா முத்திரைத்தாள்கள் முத்திரைத்தாள் விற்பனையாளர்களுக்கு விற்பனை செய்தல்

- பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்கு புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்தை அமல்படுத்துதல்.

- பணம் பெறும் அலுவலர்களின் தலநிதிக்கணக்கு மற்றும் தன் வைப்பு கணக்குகளை பராமரித்தல், அனைத்து துறை அலுவலர்களுக்கு முன்பணம் நிதி ஒதுக்கீடு வழங்குதல் (உதாரணமாக வாகன முன்பணம், கணினி முன்பணம் மற்றும் இதர)

**களஞ்சியம் [ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் திட்டம் 2.0 (IFHRMS 2.0)]**

- அரசுப் பணிகள் திறம்பட மற்றும் செவ்வனே நடைபெற நிதி மற்றும் மனிதவள மேலாண்மையை ஒருமைப்படுத்தி ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் அரசால் அமல்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக திருவாளர் அக்சென்சர் சர்வீஸஸ் (பி) லிமிடெட் என்ற முகமை கலந்தாலோசகராக நியமிக்கப்பட்டு, ஆலோசனைகள் வழங்குதல் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளரை தேர்வு செய்தல் ஆகிய பொறுப்புகள் அளிக்கப்பட்டது.

- இத்திட்டத்தினைச் செயல்படுத்த திட்ட ஒருங்கிணைப்பாளராக திருவாளர் விப்ரோ நிறுவனம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

- இத்திட்டத்திற்குத் தேவையான கணினிக் கட்டமைப்பு அனைத்து கருவூல அலுவலகங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- இத்திட்டம், முதற்கட்டமாக கரூர் மாவட்டத்தில் ஜனவரி 2020-ல் துவக்கப்பட்டு படிப்படியாக அனைத்து மாவட்டக் கருவூலங்கள் மற்றும் சம்பளக் கணக்கு அலுவலகங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. சம்பளம் மற்றும் இதர பட்டியல்கள் அனைத்தும் IFHRMS மூலமாக பெறப்பட்டு பாரத ரிசர்வ் வங்கியின் (RBI) இ-குபேர் (e-kuber portal) வழியாக பயனாளர்களின் வங்கி கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது.

- கருவூலத்தில் பெறப்படும் அரசின் வருவாய் இனங்களை மின் செலுத்துச்சீட்டு (**e-Challan**) மூலமாக பொதுமக்கள் / அரசு துறை நிறுவனங்கள் / உள்ளாட்சி அமைப்புகள் போன்றவை மின் வரவுகளாக (**e-Receipt**) 24 x 7 மணிநேரமும்

தங்குதடையின்றி இணையத்தின் மூலம் (www.karuvoolam.tn.gov.in) செலுத்த வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்சேவைகளுக்காக பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் பரோடா வங்கி ஆகிய நான்கு வங்கிகள் திரட்டல் வங்கிகளாக (Aggregator Banks) தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தற்போது இவ்வங்கிகளின் வாயிலாக அரசின் வருவாய்கள் பெறப்பட்டு, அரசின் ரிசர்வ் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

- கருவூலத்தில் பெறப்படும் அரசின் வருவாய் இனங்களை மின்வரவாக (e-challan) மின் செலுத்துச்சீட்டு மூலமாக பெறுவதற்கான நடைமுறை அரசின் வருவாய் ஈட்டும் முக்கிய துறைகளான வணிகவரித்துறை, மதுவிலக்கு & கலால் துறைகளை ஒருங்கிணைத்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

- ஒப்பளிப்பு செய்யும் நபர்களின் தனித்துவ அடையாளப்படுத்துதல் (மின்னணு கையொப்ப சான்றிதழ் (DSC)) மாநிலம் முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

- காப்பறை மற்றும் முத்திரைத் தாள் மேலாண்மை சார்ந்த வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**மேற்கொள்ளப்பட்ட முக்கிய முயற்சிகள்:**

- முக்கிய திட்டங்கள்-நிதி வழங்கல்:
  - 32.8 இலட்சம் பயனாளிகளுக்கு முதியோர் ஓய்வூதியம் (Old Age Pension) IFHRMS மென்பொருள் வாயிலாக மாதந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது.
  - டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ் 6.50 இலட்சம் பயனாளிகள் பயன் பெற்று வருகின்றனர்.
  - மூவலூர் ராமாமிர்தம் அம்மாள் புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.
- ஓய்வூதியர்களின் வருடாந்திர நேர்காணலுக்காக (Mustering) ஜீவன் பிரமான் (Jeevan Praman) உடன்

ஒருங்கிணைக்கப்பட்டு ஜுலை-2022 முதல் நேர்காணல் மின்னணுமயமாக்கப்பட்டுள்ளது.

**மாநிலக் கணக்காயருடன் ஒருங்கிணைத்தல்:**

35. மாநிலக் கணக்காயர் (கணக்குகள் மற்றும் உரிமைகள்) மூலம் மேற்கொள்ளப்படும் கருவூலம் சாரா பரிவர்த்தனைகளை ஒருங்கிணைத்தல்.

- **OPPAS** - ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை திட்டத்தில், ஓய்வுபெறும் அரசு ஊழியர்களின் ஓய்வூதியம், பணிக்கொடை மற்றும் பொது வருங்கால வைப்புநிதிக்கான கருத்துருக்கள் அனுப்பி உரிய கொடுப்பாணைகளை மின்னணு தரவுகளாக பெற்று கணினி வாயிலாக பட்டியல் தயாரிக்கப்பட்டு, ஓய்வுபெற்ற அரசு ஊழியர்கள் / குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு விரைவாகவும், துல்லியமாகவும், வெளிப்படைத்தன்மையோடும் வழங்க வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- **DAAS** – மின் செலவுச்சீட்டு (e-Voucher) தரவைப் பயன்படுத்தி மாநில கணக்காயர் அவர்களின் தணிக்கை மற்றும் கணக்கியலை மேற்கொள்ள எண்ணியல் தணிக்கை மற்றும் கணக்குகளை தொகுக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் செலவுச்சீட்டுகளை (Voucher) காகிதமின்றி அனுப்பவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**களஞ்சியம் கைபேசி செயலி பயன்பாடு**:

36. களஞ்சியம், நேரம் மற்றும் இருப்பிடத்தைப் பொருட்படுத்தாமல் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் சுய விவரத் தேவைகளை எளிதாக பெறும் வகையில், 27.02.2024 அன்று மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட களஞ்சியம் கைபேசி செயலி மூலம் பணியாளர்கள் விடுப்பு கோரி விண்ணப்பித்தல் மற்றும் அனுமதித்தல், குறுகிய கால கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கான கோரிக்கை

மற்றும் ஓய்வூதிய கருத்துரு அனுப்ப கோரி விண்ணப்பம், வருமான வரி பிடித்தம் செய்யும் நடைமுறையை (பழைய / புதிய) தேர்ந்தெடுத்தல் போன்ற சேவைகளை பெறலாம். மேலும், ஓய்வூதியம் பெறுவோர் இணையவழி நேர்காணல், பண்டிகை முன்பணம் மற்றும் ஓய்வூதியம் பெறும் கருவூலத்தை மாற்றம் செய்யும் கோரிக்கை, வருமான வரி பிடித்தம் செய்யும் நடைமுறையை (பழைய / புதிய) தேர்ந்தெடுக்கும் விருப்பம் போன்ற சேவைகளையும் பெறலாம்.

37. களஞ்சியம் (IFHRMS 2.0) மென்பொருளில் கீழ்க்காணும் அம்சங்கள் புதிதாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன:

- **பாரத ரிசர்வ் வங்கி (RBI) இன் NEFT / RTGS வசதி**:

  RBI இன் NEFT / RTGS வசதியானது IFHRMS இல் 24.04.2023 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது, இது எந்தவிதமான காலதாமதமும் இல்லாமல்

அரசின் வருவாய் இனங்களை (Receipts) உடனடியாக அரசாங்கக் கணக்கில் பெற உதவுகிறது.

- போலி பயனாளிகள் சரிபார்ப்பு நடைமுறை: முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம், முதியோர் ஓய்வூதியத் திட்டம், கைம்பெண் உதவித் தொகை, SSN-IG OAP, SSN-IG (SCP) போன்ற அரசாங்கத் திட்டங்களில் போலி பயனாளிகளைக் கண்டறியவும் மற்றும் ஒரே பயனாளிக்குப் பலமுறை பணம் வழங்கப்படுவதை சரிபார்த்து, இரட்டிப்பு பணம் மற்றும் மோசடியான பட்டியல்கள் காசாக்கப்படுவதை தவிர்க்கும் பொருட்டும், களஞ்சியம் (IFHRMS 2.0) மென்பொருளில் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- வருமான வரி தானியங்கி கணக்கீடு : வருமான வரி சட்டம் 1961-ன் படி, அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் சேமிப்பு மற்றும் முதலீடு

தொடர்பான விவரங்களை களஞ்சியம் (IFHRMS 2.0) இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதன் மூலம் ஒவ்வொரு மாதமும் வருமான வரியை சம தவணைகளில் பிடித்தம் செய்ய களஞ்சியம் (IFHRMS 2.0) மென்பொருளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் (CPS): பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் (CPS) பணிபுரிந்து, வயது முதிர்வு / விருப்ப ஓய்வுபெறும் ஊழியர்களுக்கான இறுதித் தொகை களஞ்சியம் (IFHRMS 2.0) மென்பொருளில் பெற வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- தேசிய ஓய்வூதியத் திட்டம்: பணியாளர் மற்றும் அரசின் பங்களிப்பை NSDL க்கு செலுத்துவதற்கான பட்டியல் தயார் செய்வதற்கான வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- இணையவழி நேர்காணல்: ஓய்வூதியம் பெறுவோர் ஜீவன் பிரமான் மூலம் வாழ்நாள் சான்றிதழைச் சமர்ப்பித்து, நேர்காணல் செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் தற்போது, களஞ்சியம் (IFHRMS 2.0) கைபேசி செயலியில், ஓய்வூதியம் பெறுவோர் ஆண்டு வாழ்நாள் சான்றிதழை ஆதார் சரிபார்ப்பு (Pensioner Mustering Face app) மூலம் சமர்ப்பிக்கும் நடைமுறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**செயல்படுத்தப்படும் நிலையில் உள்ள இதர ஒருங்கிணைப்பு திட்டங்கள்:**

- களஞ்சியம் (IFHRMS 2.0) உடன் போக்குவரத்து துறை மற்றும் பதிவுத்துறை போன்ற வருவாய் ஈட்டும் துறைகளை ஒருங்கிணைத்தல்.

- பி.எஸ்.என்.எல் (BSNL) மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் (TANGEDCO) உடன் ஒருங்கிணைத்தல்.

- அனைத்து துறைகளிலும் மின் பதிவேடுகளை செழுமைப்படுத்துதல்.

- ஓய்வூதிய நிர்ணய தணிக்கை: ஓய்வூதிய நிர்ணயத்தை சரிபார்க்க, மொத்த எண்ணிக்கையிலான ஓய்வூதியதாரர்களின் விவரங்களை பதிவேற்றம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**மின் கருவூலம் (Cyber Treasury)**

- மின் கருவூலம் என்பது ஒரு மின்னணுத் தரவுத் தளமாகும். இது அரசாங்கங்கள் மற்றும் நிறுவனங்கள் தங்கள் கருவூல நடவடிக்கைகளை மின்னணு முறையில் நிர்வகிக்க உதவுகிறது. இந்த அமைப்பு ஒரு பாதுகாப்பான, வலை அடிப்படையிலான இடைமுகத்தின் மூலம் நிதி சேகரிப்பு, மேலாண்மை மற்றும் விநியோகம் ஆகியவற்றை உள்ளடக்கியது. இணைய கருவூல தளங்கள் வரவு செலவு திட்டம், கணக்கியல்,

வருவாய் வசூல் மற்றும் செலவின மேலாண்மை, நிதி நடவடிக்கைகளை நெறிப்படுத்துதல் மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு நிதி செயல்முறைகளை ஒருங்கிணைக்கிறது.

- மாநிலத்தில் உள்ள அனைத்து கருவூலங்களில் செய்யப்படும் மின்னணு கட்டணப் பரிவர்த்தனைகளை கணக்கிடுவதற்கும், மாநிலக் கணக்காயருக்கு கணக்குகளை வழங்குவதற்கும் மின் கருவூலம் ஒரு மையப்படுத்தப்பட்ட கணக்கியல் பிரிவாகும். மின் கருவூலம் என்பது SNA SPARSH-ஐ செயல்படுத்தும் ஒரு பொறிமுறையாகும். இது பங்குதாரர்களான பொதுநிதி மேலாண்மைத் திட்டம், ரிசர்வ் வங்கி, மாநிலக் கணக்காயர் மற்றும் ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்த கட்டமைப்பின் மூலம் மத்திய நிதியுதவி திட்டங்களுக்கான (CSS)

நிதிகளுக்கு மாற்று நிதி ஓட்ட பொறிமுறையாக அறிமுகப்படுத்தப்பட்ட முக்கிய பண மேலாண்மை முயற்சியாக SNA SPARSH உள்ளது. இவ்வமைப்பை திறம்பட கண்காணிக்க போதுமான ஊழியர்களுடன் மின் கருவூலம் வலுப்படுத்தப்பட வேண்டும்.

**மின் கருவூலத்தின் நன்மைகள்**

**செயல்திறன் மற்றும் வேகம்** :

- தானியங்கிச் சேவைகள்: கையேடு செயல்முறைகள் மற்றும் காகித வேலைகளை குறைக்கிறது, நிதிப் பரிவர்த்தனைகள் மற்றும் செயலாக்க நேரங்களை துரிதப்படுத்துகிறது.

- நிகழ்நேர தரவு: நிதித் தரவுகளை நிகழ்நேரத்தில் பெற்று விரைவாக முடிவெடுக்க உதவுகிறது.

**வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல்** :

- தணிக்கைத் தடங்கள்: பரிவர்த்தனைகளின் விரிவான பதிவுகளை உருவாக்குகிறது,

பொறுப்புக்கூறலை மேம்படுத்துகிறது மற்றும் தணிக்கையை எளிதாக்குகிறது.

- பொது மக்கள் அணுகல்: வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதன் மூலம், அரசாங்க செலவினம் மற்றும் வருவாயைக் கண்காணிக்க குடிமக்களை அனுமதிக்கும் அம்சங்கள் பெரும்பாலும் இதில் அடங்கும்.

**செலவு சேமிப்பு:**

- நிர்வாகச் செலவுகளைக் குறைத்தல்: கருவூல செயல்பாடுகளுடன் தொடர்புடைய உடல் உழைப்பின் தேவையைக் குறைக்கிறது.

- பிழை குறைப்பு: மனிதப் பிழைகளை குறைக்கிறது, தவறுகளை சரிசெய்வது தொடர்பான செலவைக் குறைக்கிறது.

**பாதுகாப்பு :**

- மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள்: முக்கியமான நிதி தரவைப் பாதுகாக்க மேம்பட்ட

குறியாக்கம் மற்றும் பாதுகாப்பு நெறிமுறைகளைப் பயன்படுத்துகிறது.

- மோசடித் தடுப்பு: மோசடி நடவடிக்கைகளைக் கண்டறியவும் தடுப்பதற்குமான வழிமுறைகளை ஒருங்கிணைக்கிறது.

**மேம்பட்ட நிதி மேலாண்மை** :

- பணப்புழக்க மேலாண்மை: நிதி கிடைப்பது குறித்த துல்லியமான மற்றும் சரியான நேரத்தில் தகவல்களை வழங்குவதன் மூலம் பணப்புழக்கத்தை மேம்படுத்துகிறது.

- சிறந்த திட்டமிடல்: விரிவான தரவு பகுப்பாய்வு மூலம் சிறந்த வரவு செலவு திட்டம் மற்றும் நிதி திட்டமிடலை எளிதாக்குகிறது.

**பயனர் வசதி** :

- அணுகல்: பங்குதாரர்களுக்கு நிதி தகவல்களை அணுகவும், இணைய அணுகலுடன் எங்கிருந்தும் பரிவர்த்தனைகளை நடத்தவும் அனுமதிக்கிறது.

- பயன்பாட்டின் எளிமை: பயனாளிகளுக்கான எளிமையான இடைமுகங்கள், ஊழியர்கள் மற்றும் குடிமக்கள் கணினியுடன் தொடர்புகொள்வதை எளிதாக்குகின்றன.

**இயங்கக்கூடிய தன்மை** :

- பிற அமைப்புகளுடன் ஒருங்கிணைத்தல் : வரி நிர்வாகம், ஊதியம் மற்றும் கொள்முதல் முறைகள் போன்ற பிற அரசு அல்லது நிறுவன அமைப்புகளுடன் ஒருங்கிணைக்கப்படலாம். இது ஒரு ஒருங்கிணைந்த நிதி மேலாண்மை சூழலை உருவாக்குகிறது.

**சுற்றுச்சூழல் நன்மைகள்** :

- காகிதமற்ற செயல்பாடுகள்: காகித பயன்பாட்டைக் குறைக்கிறது. சுற்றுச்சூழல் நிலைத்தன்மை முயற்சிகளுக்கு பங்களிக்கிறது. ஒட்டுமொத்தமாக, இணைய கருவூலங்கள் கருவூல நடவடிக்கைகளை நவீனப்படுத்தி நெறிப்படுத்துகின்றன. இது

அரசாங்கங்கள் மற்றும் அமைப்புகளுக்கான நிதி நிருவாகத்தின் செயல்திறன், பாதுகாப்பு மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தும் பல நன்மைகளை வழங்குகிறது.

**மின் அலுவலக நடைமுறை துறை தலைமை அலுவலகம் மற்றும் சார் அலுவலகங்களில் செயல்படுத்துதல் (e-Office)**

- மின் அலுவலக நடைமுறையை அரசின் கொள்கை முடிவு காரணமாக தலைமை அலுவலகம் மற்றும் சார்கருவூலகங்களில் செயல்படுத்த வேண்டி கருவூலக் கணக்குத் துறையின் கீழ் பணிபுரியும் அனைத்து உதவி நிரலர்களுக்கும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை அலுவலகத்தில் ஜூலை 2023 மாதத்தில் இரண்டு நாட்கள் நேரடிப் பயிற்சி அளிக்கப்பட்டது. கருவூலக் கணக்கு ஆணையரகத்தில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களுக்கும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை அலுவலகப் பணியாளர்களால் கருவூலக்

கணக்கு ஆணையரக வளாகத்தில் நேரடிப் பயிற்சி அளிக்கப்பட்டது.

- அதன் தொடர்ச்சியாக கருவூலக் கணக்குத் துறை தலைமை அலுவலகத்தில் 01.08.2023 முதல் மின்அலுவலக நடைமுறை அமல்படுத்தப்பட்டது. கருவூலக் கணக்குத் துறை சார் அலுவலகங்களில் 01.01.2024 முதல் அமல்படுத்தப்பட்டு கோப்புகள் திறன்பட மின் அலுவலக நடைமுறையில் கையாளப்பட்டு வருகின்றன.

**புதிய மருத்துவக் காப்பீடு திட்டம் – 2021**

38. அரசு ஊழியர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 30.06.2021-க்கு பிறகு மேலும் நான்காண்டிற்கு நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

39. புதிய மருத்துவக் காப்பீடு திட்டம் - 2021, பொதுத் துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் மூலம் செயல்படுத்தப்படுகிறது. மேலும் தற்பொழுது 01.07.2021 முதல் நான்காண்டிற்கு காலநீட்டிப்பு செய்து

இத்திட்டத்தின் மூலம் அரசு ஊழியர்கள் மட்டுமின்றி உள்ளாட்சி அமைப்புகள், அரசு சார்ந்த நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் அரசு பல்கலைக் கழகங்கள் விருப்பமுள்ள மாநில அரசு அமைப்புகள் / நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் தகுதியுள்ள அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம்) 2021-2025 வரை மருத்துவ காப்பீட்டு திட்டம் மூலம் காசில்லா சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதற்காக ஒவ்வொரு மாதமும் பணியாளரிடமிருந்து ஜூலை 2021 மாதத்திலிருந்து அவர்களது மாதாந்திர ஊதியத்தில் ரூ.300/- (ரூ.295/- காப்பீட்டு சந்தா + ரூ.5/- சிறப்பின நோய்கள் மற்றும் சூழ்நிலைகளில் ஏற்படும் எதிர்பாரா செலவுகளுக்காக நிதி மூலதன சந்தா) பிடித்தம் செய்யப்படுகிறது.

40. 30.12.2021 முதல், புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அரசு ஊழியர்களைச் சார்ந்து வாழும் மகன்கள் மற்றும் மகள்கள் அவர்களது வயது வரம்பினைக்

கருத்தில் கொள்ளாமல் இத்திட்டத்தின் கீழ் சிகிச்சை பெற்றுப் பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது

41. இப்புதிய திட்டத்தில், சில நோய்களையும், சில சிகிச்சைகளையும் சிறப்பினமாக கருதி அதற்கு 10.00 இலட்சம் ரூபாய் வரை மருத்துவ சிகிச்சை பெற உச்சவரம்பு உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், கூடுதலாக 10.00 இலட்சம் ரூபாய் மூலதன நிதியிலிருந்து வழங்கிடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

42. உயிர் காக்கும் அவசரத் தன்மை கொண்ட அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கு இத்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்படாத (Non-Network) மருத்துவமனைகளிலும் சிகிச்சை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

43. மேலும், புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் அங்கீகரிக்கப்படாத மருத்துவமனைகளில் வழங்கப்படும் சிகிச்சைகள் மற்றும் அங்குள்ள மருத்துவ வசதிகளின் தரம் அறியப்படாதநிலையில், ஒரு அரசு

ஊழியர் தெளிவான மனநிலையில் அத்தகைய மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டால், அதே சிகிச்சையானது கீழ்நிலையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனையில் மேற்கொண்டால் ஆகும் செலவில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தில் 75% அளவிற்கு மருத்துவ செலவினம் மீள வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

44. 14.02.2022 முதல், கோவிட்-19 நோய் தொற்றிற்கான சிகிச்சையை குறிப்பிட்ட சிகிச்சைகளின் பட்டியலில் சேர்த்து ரூ.10.00 லட்சம் வரை காசில்லா சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

45. புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் செயல்பாடுகளை மேற்பார்வையிடவும் சிறப்பான முறையில் நடைமுறைபடுத்தவும் தகவல் தொழில்நுட்ப மென்பொருள் மற்றும் புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்திற்கென கைபேசி செயலி (Mobile Application) ஆகியவை மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களால் 27.02.2024 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

46. புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம் 2021ன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் கட்டணமில்லா சிகிச்சை பெற அரசு ஊழியர்களுக்கு இதுவரை 6,85,178 காப்பீட்டு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது.

47. இத்திட்டத்தின் கீழ், **203** மருத்துவ சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சை முறைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இதில் **116** அறுவை சிகிச்சைகள் மற்றும் **87** மருத்துவ சிகிச்சைகளும் அடங்கும். தற்போது தமிழ்நாடு, புதுச்சேரி, பெங்களூரு, திருவனந்தபுரம் மற்றும் புதுடெல்லி ஆகிய இடங்களில் உள்ள **1296** மருத்துவமனைகள் மற்றும் புற்றுநோய்க்கு சிகிச்சை அளிக்கக்கூடிய அரசின் **16** கதிரியக்க சிகிச்சை மையங்கள் மூலம் இத்திட்டத்தின் கீழ் மருத்துவ உதவியினை வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

48. புதிய மருத்துவக் காப்பீடு திட்டம் 2021-ல் **01.07.2021 முதல் 31.03.2024** வரை 1,93,086 பயனாளிகள் ரூ.936.14 கோடி அளவிற்கு மருத்துவ சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர்.

| மாதங்கள் | ஜுலை 2023 | ஆகஸ்டு 2023 | செப்டம்பர்2023 | அக்டோபர்2023 | நவம்பர் 2023 | டிசம்பர் 2023 | ஜனவரி 2024 | பிப்ரவரி 2024 | மார்ச் 2024 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அங்கீகரிக்கப் பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) | 3041.79 | 2856.42 | 2775.00 | 2924.04 | 2661.95 | 3115.09 | 1449.77 | 3234.95 | 3156.73 |
| பயனாளிகளின் எண்ணிக்கை | 6222 | 5689 | 5500 | 6086 | 5093 | 6056 | 3604 | 6053 | 6040 |

மேலும் 2021-2024 ஆம் நிதி ஆண்டுகளில் 80.59 இலட்சம் ரூபாய் தமிழ்நாடு மருத்துவ கவனிப்பு விதியின் கீழ் பயனாளிகளுக்கு அரசால் வழங்கப்பட்டுள்ளது.

இது தவிர தற்போது கோவிட்-19-க்கான சிகிச்சைகளை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ மனைகளில் மேற்கொள்ள 5.00 கோடி ரூபாய் நிதிய மூலதனம் (Corpus Fund) உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் இதுநாள் வரை 85 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கூடுதலாக, புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் பட்டியிலிடப்படாத மருத்துவமனைகளில் தீவிரமற்ற கோவிட்- 19 சிகிச்சைக்கு நிதிய மூலதனம் (corpus fund) ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதில் இதுவரை 11.15 கோடி ரூபாய் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

**திறன் மேம்பாடு கருவூலம் மற்றும் கணக்குகள் துறை அதிகாரிகளுக்கு அறிவு பரிமாற்றம், திறன் மேம்பாட்டு பயிற்சி**

49. கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், முதன்மை கணக்கு அலுவலர்கள், கணக்கு அலுவலர்கள் மற்றும் உதவி கணக்கு அலுவலர்கள் வரை சுமார் 700 அதிகாரிகள், நிதிக் கட்டுப்பாட்டாளர், நிதி ஆலோசகர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர்கள் போன்ற பல்வேறு துறைகள், அரசு நிறுவனங்கள் மற்றும் வாரியங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

மேற்கண்ட அதிகாரிகளின் பணிகள் நிதி மேலாண்மை, கணக்குகளை இறுதி செய்தல், உள் தணிக்கை, வரவு செலவுத் திட்டம், வரிக் கணக்கு தாக்கல்

செய்தல் மற்றும் சட்டப்பூர்வ கடமைகளை நிறைவேற்றுதல் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளை உள்ளடக்கியது. இந்த அதிகாரிகள் தங்கள் துறைகளில் தற்போதைய தொழில்நுட்ப முன்னேற்றங்களை அறிந்து கொண்டு அதற்கு ஏற்றவாறு அவர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான கட்டாயத் தேவையை உணர்ந்து, விரிவான மற்றும் தொடர்ச்சியான பயிற்சித் திட்டங்களை வழங்குவதன் மூலம் அவர்களுடைய திறன் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியது.

அதன்படி, பல்வேறு படி நிலைகளில் உள்ள அதிகாரிகளின் திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு பயிற்சித் திட்டங்களை வழங்குவதற்காக, இந்திய பட்டயக் கணக்காளர்களின் நிறுவனத்துடன் (ஐசிஏஐ) இத்துறை புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. இந்த பயிற்சித் திட்டமானது மேம்படுத்தப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுடன், தேர்ச்சி மற்றும்

இணக்கத்தை உறுதிப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல்வேறு பணியாளர்களை உள்ளடக்கிய நான்கு தனித்தனி தொகுதிகளில் 416 அதிகாரிகள் விரிவான பயிற்சி பெற்றனர். இப்பயிற்சியானது ஒவ்வொன்றும் ஐந்து நாட்கள் நீடித்தது. இந்த பயிற்சியில் பல்வேறு வகையான தலைப்புகளில் பயிற்சி வழங்கப்பட்டது. கூட்டாண்மை நிறுவனம், கருவூல மற்றும் குறிப்பிட்ட பிரிவில் நிபுணத்துவம் பெற்றவர்கள் மூலம் வகுப்புகள் நடத்தப்பட்டது. பயிற்சியாளர்களுக்கு வளமான மற்றும் தாக்கம் மிக்க கற்றல் அனுபவத்தை உறுதி செய்தது.

சென்னை, இந்திய தொழில்நுட்ப நிறுவனம் மூலம் (ஐஐடி) 56 அதிகாரிகளுக்கு தரவுப் பகுப்பாய்வு மீது பயிற்சி வழங்கப்பட்டது. அதிநவீன தொழில்நுட்பத்தில் அவர்களின் அறிவுத்திறனை அதிகரிப்பதே இதன் நோக்கமாக இருந்தது. இதனால் இந்தக் களத்தில் அவர்களின் திறமையை மேம்படுத்துகிறது.

மேலும், புதியதாக பணியமர்த்தப்பட்ட இளநிலை உதவியாளர்களுக்கு துறை தொடர்பான பயிற்சி மற்றும் அறிமுக பயிற்சி இத்துறையின் மூலம் வழங்கப்பட்டது. இந்த பயிற்சியானது சம்பந்தப்பட்டவர்களுக்கு இத்துறையின் செயல்பாடுகள் மற்றும் கட்டமைப்பை அவர்களுக்கு அறிமுகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு வழங்கப்பட்டது. மேலும், இப்பயிற்சியானது ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மை அமைப்பு (IFHRMS) மற்றும் மின் அலுவலக நடைமுறை தொடர்பான வழிகாட்டுதல் பற்றிய அறிமுகத்தை வழங்கியது.

கருவூலக் கணக்குத் துறையில் பல்வேறு பணிகளை புரியும் இளநிலை உதவியாளர் முதல் உதவி கணக்கு அலுவலர் வரையில் உள்ள அனைவரின் திறனை மேம்படுத்த மாவட்ட அளவில் முறையான தொடர்ந்த பயிற்சியினை வழங்கும் பொருட்டு மாவட்ட அளவில் திறன் உள்ளவர்களை கண்டறிந்து அவர்களுக்கு துறை பற்றிய விரிவான மற்றும் தெளிவான பயிற்சி வழங்கிய பின்

அவர்களைக் கொண்டு மாவட்ட அளவில் பயிற்சி வழங்க முடிவு செய்யப்பட்டது. எனவே அதன் முதல்படியாக “பயிற்சியாளர்களின் பயிற்சிக்கு” முன் மாதிரியாக சென்னை மண்டலத்தில் உள்ள கருவூலம் / சார் கருவூல அலுவலகத்தில் 30 பணியாளர்களுக்கு கருவூலத் துறையின் பணிகள் மற்றும் பயிற்சியாளர்களின் பயிற்சி வழங்கப்பட்டது.

## சிறு சேமிப்புத் துறை

50. குடிமக்களிடம் சிக்கனம் மற்றும் சேமிக்கும் பழக்கத்தினை ஊக்குவித்தலே சிறுசேமிப்புத் திட்டத்தின் தலையாய நோக்கமாகும். இந்தியாவில் சிறுசேமிப்புத் திட்டங்கள் தனிநபர் வீட்டுச்சேமிப்பிற்கு முக்கிய ஆதாரமாக விளங்குகின்றது. சிறுமுதலீட்டாளர்களையும் சேமிப்பு இயக்கத்தின் கீழ்கொணர்ந்து, அதன் மூலம் அவர்களின் முதலீட்டிற்கு அதிக பாதுகாப்பு அளித்து, அதே நேரத்தில் முதலீட்டின் மீது கணிசமான வட்டி கிடைப்பதற்கும் உறுதிசெய்யப்படுகிறது. தமிழ்நாட்டு மக்களிடம் சிக்கனம் மற்றும் சேமிப்பின் பயன்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, அஞ்சல் துறையின் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வரும் சிறுசேமிப்புத்திட்டங்களை ஊக்குவிக்கும் பணியில் மாநில சிறுசேமிப்பு ஆணையரகம் ஈடுபட்டுவருகின்றது.

### சிறுசேமிப்புத் திட்டங்கள்

51. சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரின் தேவைகளுக்கு ஏற்றவகையில், பலவிதமான

சிறுசேமிப்புத்திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. சிறுசேமிப்புத் திட்டங்களின் வட்டிவிகிதத்தினை ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி, ஏப்ரல், ஜுலை மற்றும் அக்டோபர் மாதங்களின் முதல்நாளில் மாற்றியமைத்து ஒன்றிய அரசு அறிவிப்பினை வெளியிடுகிறது.

இத்தகவல்கள் யாவும் தற்போது சிறுசேமிப்புத் துறையின் இணையதளமான (www.tnsmallsavings.org)-இல் வெளியிடப்பட்டு அவ்வப்போது மாற்றங்களும் வெளியிடப்படுகின்றன.

**செல்வமகள் சேமிப்புத் திட்டம்**

52. செல்வமகள் சேமிப்பு திட்டம் என்ற பெண்குழந்தைகளுக்கான சேமிப்புத்திட்டத்தை ஒன்றிய அரசு 03.12.2014 முதல் அறிமுகப்படுத்தியது. பத்து வயதுக்குட்பட்ட பெண்குழந்தைகளுக்காக மட்டும் பிரத்யேகமாக ஏற்படுத்தப்பட்டுள்ள இத்திட்டத்தின்கீழ், அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஓர் ஆண்டிற்கு அதிகபட்சமாக 1.5 இலட்சம் ரூபாய் வரை வைப்பீடு

செய்யலாம். இத்திட்டத்திற்கான தற்போதைய வட்டிவிகிதம் 01.04.2023 முதல் 8.2 விழுக்காடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**பொன்மகன் பொது வைப்புநிதி**

53. செல்வமகள் சேமிப்புத்திட்டத்திற்கு கிடைத்த வரவேற்பையொட்டி, ஆண் குழந்தைகளும் பயன்பெறும்வகையில் பொது வருங்கால வைப்பு நிதித் (PPF) திட்டம் "**பொன்மகன் பொது வைப்புநிதி**" எனப் பெயரிடப்பட்டு இந்திய அஞ்சல்துறை மூலம் 04.09.2015 முதல் மறுபடியும் துவக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், பத்து வயதிற்குட்பட்ட ஆண் குழந்தைகள், அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலர் மூலமும், பத்து வயதிற்கு மேற்பட்டவர்கள் தாங்களாகவும் வைப்பு நிதிக்கணக்கைத் துவக்கலாம். ஓர் ஆண்டிற்கு 1.5 இலட்சம் ரூபாய் வரை வைப்பீடு செய்ய வாய்ப்புள்ள இத்திட்டத்திற்கு 01.04.2024 முதல் வட்டி விகிதம் 7.1 விழுக்காடாக வழங்கப்படுகிறது.

## மூத்த குடிமக்கள் சேமிப்புத்திட்டம்

54. 01.04.2024 முதல் 5 ஆண்டுகள் மூத்த குடிமக்கள் சேமிப்புத்திட்டத்திற்கு 7.4 விழுக்காடு வட்டி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வட்டி வழங்கப்படும். கணக்கினை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிக்கும் வசதி உண்டு. கணக்கினை முன்கூட்டியே முடிக்கும் பொழுது ஓராண்டிற்கு பிறகு 1.5 விழுக்காடும், இரண்டு ஆண்டிற்கு பிறகு ஒரு விழுக்காடும் முதலீட்டுத் தொகையில் பிடித்தம் செய்து வழங்கப்படும்.

## சிறுசேமிப்பு வசூல் விவரங்கள்

55. சிறுசேமிப்புத் திட்டங்களின் வாயிலாக 2013-2014 முதல் 2023-2024 வரையிலான நிதியாண்டுகளில் தமிழகத்தில் திரட்டப்பட்ட நிதிவிவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | நிதியாண்டு | இலக்கு | மொத்தம் | திரும்பப் பெறப்பட்ட தொகை | நிகரம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2015 - 16 | - - | 17259.82 | 15314.41 | 1945.41 |
| 2 | 2016 – 17 | - - | 20737.29 | 17227.19 | 3510.10 |
| 3 | 2017-18 | - - | 25257.16 | 17301.21 | 7955.95 |
| 4 | 2018-19 | -- | 31923.58 | 19511.08 | 12412.50 |
| 5 | 2019-20 | -- | 41195.23 | 23572.59 | 17622.64 |
| 6 | 2020-21 | -- | 41478.48 | 27421.02 | 14057.46 |
| 7 | 2021-22 | -- | 41970.55 | 25600.37 | 16370.18 |
| 8 | 2022-23 | -- | 45781.21 | 31285.18 | 14496.03 |
| 9 | 2023-24 | -- | 61736.24 | 46671.53 | 15064.71 |

## முகவரமைப்பு மற்றும் வெகுமதிகள்

### முகவரமைப்பு

56. சிறுசேமிப்புத் தொகையைத் திரட்டுவதற்காக மாநிலம் முழுவதும் முகவர்கள்

நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் சிறுசேமிப்புத் திட்டத்தை ஊக்குவிப்பதிலும், வசூல் பணிகளிலும் முக்கியபங்கு வகிக்கின்றனர். இதில் மகளிர் முகவர் (MPKBY) திட்டத்தின் கீழ் மட்டும் அஞ்சலக தொடர்வைப்புத் திட்டத்திற்கு (PORD) முன்னுரிமை அளித்து மகளிர் மட்டுமே சிறுசேமிப்பு முகவர்களாக நியமனம் செய்யப்பட்டு வருவது குறிப்பிட்டத்தக்கது. தமிழ்நாடு முழுவதும் தற்பொழுது, அதாவது 31.12.2023 வரை, மொத்தம் 27,604 பதிவு பெற்ற முகவர்கள் பணியாற்றி வருகின்றனர். அந்த விவரங்கள் பின்வருமாறு:-

| வ. எண் | முகவர்களின் வகை | மொத்த முகவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்புத் திட்டம் (SAS) | 7165 |
| 2 | மகளிர் முகவர் திட்டம் (MPKBY) | 20,439 |
| | **மொத்தம்** | **27,604** |

**வெகுமதிகள்**

57. சிறுசேமிப்புத்திட்ட முகவர்களை ஊக்குவிப்பதற்கும் பொதுமக்களின் மனங்களில் சேமிக்கும் பண்பை வளர்ப்பதற்கும், சிறுசேமிப்பில் சிறந்து விளங்கும் மகளிர் (MPKBY) முகவர்களுக்கு ஊராட்சி ஒன்றியம், மாவட்டம் மற்றும் மாநில அளவிலும் மற்றும் நிலை முகவர்களுக்கு (SAS) மாவட்டம் மற்றும் மாநில அளவிலும் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு அரசு ரொக்கப்பரிசுகள் மற்றும் கேடயங்களை வழங்கி வருகின்றது. 2017–2018 முதல் 2023-2024 ஆம் நிதி ஆண்டு வரையில் ஒவ்வொரு ஆண்டும் 9.68 இலட்சம் ரூபாய் அரசால் அனுமதிக்கப்பட்டு 933 எண்ணிக்கையில் முகவர்கள் பயனாளிகளாக ஒவ்வொரு ஆண்டும் தெரிவு செய்யப்பட்டனர்.

**உலக சிக்கன நாள்**

58. சிறுசேமிப்புத்துறையால் உலகசிக்கன நாள் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 30-ஆம் நாள் அனுசரிக்கப்படுகிறது. தமிழ்நாடெங்கும் சிக்கனம் மற்றும் சிறுசேமிப்புத்திட்டங்களில் சேமித்தல் ஆகிய இரண்டு

பழக்கங்களை ஊக்கப்படுத்துவதிலும், சிறுசேமிப்பு முதலீட்டாளர்கள் மற்றும் முகவர்களின் குறைகளை இணையதளம் (www.tnsmallsavings.org) மூலமாக களைவதிலும், இத்துறை முக்கியப்பங்கு வகிக்கிறது. ஒவ்வோரு ஆண்டும் உலக சிக்கன நாள் விழாவின் போதும், பொதுமக்களிடையே சிறுசேமிப்புத்திட்டங்களை விளம்பரப்படுத்துவதில், மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியாளர்களும், சென்னை பெருநகரில் சென்னை பெருநகர மாநகராட்சி ஆணையாளரும் முக்கியப் பங்காற்றுகின்றனர். அதன்படி, மாணாக்கர்களிடையே சிறுசேமிப்பு தொடர்பான கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி, நடனப்போட்டி மற்றும் நாடகப்போட்டிகள் நடத்தப்பட்டு, தேர்வு செய்யப்பட்ட மாணாக்கர்களுக்கு சிறுசேமிப்புத் துறை மூலம் பரிசு அளிக்கப்படுகின்றது.

2017-2018 முதல் 2023-2024 ஆம் நிதியாண்டு வரையில் ஒவ்வொரு ஆண்டும் 3.30 இலட்சம் ரூபாய் அரசால் அனுமதிக்கப்பட்டு 933 எண்ணிக்கையில்

மாணவர்கள் பயனாளிகளாக ஒவ்வொரு ஆண்டும் தெரிவுசெய்யப்பட்டனர்.

**விளம்பரம்**

59. சிறுசேமிப்புத்துறை, சென்னை மற்றும் மாவட்டங்களில் நடத்தப்படும் பொருட்காட்சிகளில் கலந்துகொண்டு, சிறுசேமிப்பு அரங்கு அமைத்தும், பொதுமக்களுக்கு துண்டுப் பிரசுரங்கள் வழங்கியும் விழிப்புணர்வு ஏற்படுத்துகின்றது.

அதுபோல கடந்த நிதிஆண்டுகளில் பல்வேறு கிராமங்களில் 10.00 இலட்சம் ரூபாய் செலவில் சிறுசேமிப்பு குறித்த 250 தெருநாடகங்கள் நடத்தப்பட்டன.

## தணிக்கைத் துறைகள்

60. நிதித்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள பின்வரும் தணிக்கைத் துறைகளின் மேற்பார்வை தலைவராக தலைமைத் தணிக்கை இயக்குநர் செயல்படுகிறார்.

| வ. எண் | தணிக்கைத் துறைகளின் பெயர்கள் |
|---|---|
| 1. | உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை |
| 2. | கூட்டுறவுத் தணிக்கைத் துறை |
| 3. | மாநில அரசு தணிக்கைத் துறை |
| 4. | பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை |
| 5. | இந்து சமய அறநிறுவனங்களின் தணிக்கைத் துறை |

## தலைமைத் தணிக்கை இயக்குநர்

61. தணிக்கை முறையில் அடிப்படை சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கும், அனைத்து தணிக்கைத் துறைகளையும் தடையின்றி ஒருங்கிணைத்து, அனைத்து அரசுத் துறைகள் மற்றும் நிறுவனங்கள் முழுவதிலும் உட்தணிக்கை மற்றும் சட்டபூர்வ தணிக்கைகளின் செயல்பாடுகள் திறம்பட நடைபெறுவதை உறுதிசெய்யும் நோக்குடன், அரசால் தலைமைத் தணிக்கை இயக்குநர் அலுவலகம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி நிதித் தணிக்கை, கூட்டுறவு தணிக்கை, பால் கூட்டுறவுகளின் தணிக்கை, மாநில அரசு தணிக்கை, இந்துசமய அறநிறுவனங்களின் தணிக்கை மற்றும்

எதிர்வரும் காலத்தில் நிதித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படும் பிற தணிக்கைத் துறைகள் ஆகியவற்றின் தணிக்கை செயல்பாடுகளுக்கான நிருவாக / மேற்பார்வைத் துறைத் தலைவராக தலைமைத் தணிக்கை இயக்குநர் நியமிக்கப்பட்டுள்ளார். தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம், 2014-ன் பிரிவு 3ன் கீழ், தலைமைத் தணிக்கை இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை இயக்குநராகவும் செயல்படுவார்.

**செயற்பரப்பு**

62. அரசுத்துறைகள் மற்றும் அரசு திட்டங்களின் செயல்திறன் பற்றிய நம்பகமான மற்றும் துல்லியமான தகவல்களை ஆட்சியாளர்களுக்கு வழங்குவதே தணிக்கையின் நோக்கமாகும். தணிக்கையின் கண்டறிதல்கள், வளங்களை திறம்பட ஒதுக்கீடு செய்யவும், அதன் மூலம் பொது மக்களுக்கு வழங்கப்படும் சேவையினை மேம்படுத்தவும் மற்றும் வரி செலுத்துவோரின் நன்மதிப்பை அதிகரிக்கவும் வழிகோலுகின்றன.

63. அரசுத் தணிக்கைத் துறைகளால் மேற்கொள்ளப்படும் உட்தணிக்கை மற்றும் சட்டப்பூர்வ தணிக்கைச் செயல்பாடுகள் திறம்பட மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்வதுடன், தவறுகளை முன்கூட்டியே கண்டறிந்து, தேவையான திருத்த நடவடிக்கைகள் காலதாமதமின்றி மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்யும் பொறுப்பு தலைமைத் தணிக்கை இயக்குநருக்கு அளிக்கப்பட்டுள்ளது. மேலும், தணிக்கைத் துறைகளின் திறனை மேம்படுத்துவதற்கும், தணிக்கைகளில் உயர்தர செயல் முறைகளை ஏற்படுத்துவதற்கும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனை செயல்படுத்திட தலைமைத் தணிக்கை இயக்குநர் அலுவலகம் 3 செயல்பாட்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

- திறன் மேம்பாடு & பயிற்சி
- தணிக்கை தர உத்தரவாதம்
- தணிக்கை சீர்திருத்தங்கள் & தகவல் தொழில்நுட்பம்

**சிறப்பு முன்னெடுப்புகள்:**

64. தணிக்கையினை மிகவும் வெளிப்படையானதாகவும் தர மேம்பாட்டினை உறுதி செய்யும் பொருட்டும் பல முன்னெடுப்புகள் எடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் சில,

**திறன் மேம்பாடு**

65. தணிக்கையாளர்களின் திறனைப் பொறுத்தே தணிக்கையின் தரம் அமையும் என்பதால், புத்தாக்கப் பயிற்சி மற்றும் செயல்திறன் தணிக்கை உள்ளிட்ட பல பயிற்சிகளை வழங்குவதில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

**தணிக்கைத் தர மேலாண்மை அமைப்பு**

66. தணிக்கைக்குழு உருவாக்கம், தணிக்கைத் திட்டம் வகுத்தல், அறிக்கை சமர்ப்பித்தல் போன்றவற்றில் சிறந்த நடைமுறைகள் மற்றும் தணிக்கைத் தரநிலைகள் வகுக்கப்பட்டு, அவை செயல்படுத்தப்பட்டு வருவது கண்காணிக்கப்படுகிறது.

**கணினிவழி தணிக்கை**

67. தணிக்கையின் ஆரம்பம் முதல் அறிக்கை வெளியிடுதல் மற்றும் அறிக்கையின் மீது எடுக்கப்படும் தொடர் நடவடிக்கைகள் வரை அனைத்து செயல்பாடுகளையும் கண்காணித்திட ஒருங்கிணைந்த தணிக்கைத் தகவல் மேலாண்மை அமைப்பு (C-AIMS) உருவாக்கப்பட்டு வருகிறது. மேலும் தரவு பகுப்பாய்வு மென்பொருள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

**தணிக்கைச் சீர்திருத்தங்கள்**

68. திட்டச் செயலாக்கத்தினை பாரபட்சமற்ற முறையில் மதிப்பீடு செய்யவும், திட்டச் செயலாக்கத்திற்கான பொறுப்புடைமையை அதிகரித்திடும் பொருட்டும் செயல்திறன் தணிக்கை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பொது சேவை வழங்கலின் திறனை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை கருத்தில் கொண்டு, செயல்திறன் தணிக்கைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு இதற்கென தலைமைத் தணிக்கை இயக்குநர் அலுவலகத்தில்

தனிப் பிரிவு உருவாக்கப்பட உள்ளது. தணிக்கை நடைமுறையை எளிதாக்கும் பொருட்டும், சிறிய நிறுவனங்களின் தணிக்கையினை இலகுவாக்குவதற்கும், சரிபார்ப்பு பட்டியல் (Check List) அடிப்படையிலான தணிக்கை முறை (Template Audit) முன்னெடுக்கப்பட உள்ளது.

## உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

69. மதராஸ் உள்ளாட்சி நிதிச் சட்டம், 1871-ன் கீழ் உருவாக்கப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்களின் கணக்குகளின் தணிக்கையினை மேற்கொள்ள, 1885 ஆம் ஆண்டில் உள்ளாட்சி நிதிக் கணக்குகள் ஆராய்வாளர் பதவி (Examiner) தோற்றுவிக்கப்பட்டு 1921இல் தனித்துறையாக உருவாக்கப்பட்டது. 'உள்ளாட்சி நிதிக் கணக்குகள்' என்ற பெயர் 'உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை' என்றும், 'ஆராய்வாளர்' என்ற பெயர் 'உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர்' என்றும் 1995 ஆம் ஆண்டில் மாற்றம் செய்யப்பட்டது. உள்ளாட்சி அமைப்புகளின் தணிக்கைக்கான சட்டப்பூர்வ கட்டமைப்பை உருவாக்க இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம், 2014 மற்றும் உள்ளாட்சி நிதித் தணிக்கை விதிகள், 2016, அரசால் இயற்றப்பட்டது. தலைமைத் தணிக்கை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் அலுவல் வழி இயக்குநராக செயல்படுவார்.

**தணிக்கைக்கான ஆதாரம்**

70. நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், வேளாண் விற்பனைக் குழுக்கள், உள்ளாட்சி நூலக ஆணையக் குழுக்கள் மற்றும் இதர மானியம் பெறும் நிறுவனங்களின் கணக்குகளை அந்தந்த நிறுவனங்களுக்கான விதிமுறைகளின்படி சட்டப்பூர்வமாக தணிக்கை செய்யும் அதிகாரம் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம், 2014 இன் பிரிவு 4 மற்றும் 5 இன் படி, உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி நிதிக் கணக்குகளை தணிக்கை செய்ய சட்டபூர்வ தணிக்கையாளராக உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் நியமிக்கப்பட்டுள்ளார்.

**தணிக்கை நோக்கம்**

71. உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டத்தின் பிரிவு 4 மற்றும் பிரிவு 6(1) இன் படி, உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கு, உள்ளாட்சி நிறுவனங்களின் சட்டப்பிரிவுகளின்படி அல்லது இயக்குநரின்

பரிந்துரையின்பேரில் மற்றும் அரசின் ஆணையின் அடிப்படையில் தல நிதி கணக்குகளை ஆண்டுதோறும் அல்லது பொருத்தமான கால இடைவெளியில் தணிக்கை செய்யவும் மற்றும் தேவையான இனங்களில் உடனிகழ்வு தணிக்கை செய்யவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சட்டப்பூர்வ தணிக்கையின் போது அரசால் அவ்வப்பொழுது வழங்கப்படும் வழிகாட்டு நெறிமுறைகளின்படி தணிக்கை செய்யப்படும் நிறுவனங்களின் செயல்பாடுகள் அமைந்துள்ளனவா என்பது குறித்து முழுமையான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அதில் ஏதேனும் விதிமீறல்கள் இருப்பின் அதன் விவரம் உடனுக்குடன் அரசுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**தணிக்கை செய்யப்படும் நிறுவனங்கள்**

72. மாநில அரசின் பல்வேறு ஆணைகளின்படியும், உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் மற்றும் உள்ளாட்சி நிதித் தணிக்கை விதிகளின் கீழ் வழங்கப்பட்ட மற்றும் அறிவிக்கைகளின்படியும் கீழே

விவரிக்கப்பட்டுள்ள பலவகையான நிறுவனங்களில் தணிக்கை மேற்கொள்ள உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | நிறுவனங்கள் | | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | மாநகராட்சிகள் | 21 |
| | | நகராட்சிகள் | 138 |
| | | பேரூராட்சிகள் | 490 |
| 2 | ஊரக உள்ளாட்சி அமைப்புகள் | மாவட்ட ஊராட்சிகள் | 36 |
| | | ஊராட்சி ஒன்றியங்கள் | 388 |
| | | கிராம ஊராட்சிகள் (ஆண்டுதோறும் சுழற்சி 20%+2% முறையில்) மொத்த கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை –12525 | 2819 |
| 3 | பல்கலைக்கழகங்கள் | பல்கலைக்கழகங்கள் | 23 |
| 4 | பிற நிறுவனங்கள் | நூலக ஆணைக்குழுக்கள் | 32 |
| | | மாவட்ட வேளாண்மை விற்பனைக் குழுக்கள் | 32 |
| | | உள்ளூர் திட்டக் குழுமங்கள் மற்றும் புதுநகர் வளர்ச்சிக் குழுமங்கள் | 28 |
| | | தமிழ்நாடு மாநில உயர்கல்வி மையம் | 1 |
| | | இதர இனங்கள் (அரசர் சத்திரம், இராஜ வேத பாட சாலை) | 2 |
| | **மொத்தம்** | | **4010** |

**தணிக்கைச் செயல்திறன்**

73. தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம், 2014 மற்றும் உள்ளாட்சி நிதித் தணிக்கை விதிகள், 2016 இன்படி உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள், நிதி மற்றும் நிருவாக செயல்பாடுகளை முறையாகவும், சுயமாகவும் ஆய்வு செய்து தணிக்கை கண்டுபிடிப்புகளை உரிய ஆதாரங்களுடன் குறிப்பிட்ட காலவரையறைக்குள் தரமான தணிக்கை அறிக்கையினை அளிப்பது உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் முக்கிய பணியாகும்.

**தணிக்கை அறிக்கைகள்**

74. தணிக்கை செயல்பாட்டின் முடிவாக ஆண்டு நிதி அறிக்கைகளின் மீதான பாரபட்சமற்ற கருத்தை வெளிப்படுத்துவதே தணிக்கை அறிக்கையின் நோக்கமாகும். உள்ளாட்சி நிறுவனங்களை நிருவகிக்கும் சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு முரணாக நடைபெற்றுள்ள செயல்பாடுகள் தொடர்பான ஆட்சேபனைகளும் தணிக்கை அறிக்கையில் இடம்பெறுகின்றன. தணிக்கையில் சுட்டிக்காட்டப்படும் குறைபாடுகள் பற்றி

சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்களுக்குத் தெரிவிக்கப்படும். உள்ளாட்சி நிதித் தணிக்கை விதிகள், 2016, விதி 10(7) இன் படி தணிக்கையின் முடிவைப் பொறுத்து குறையின்மை (Unqualified) சான்றிதழ், குறைவுள்ளது (Qualified) என்பதற்கான சான்றிதழ், பொறுப்புத் துறப்புச் (Disclaimer) சான்றிதழ் அல்லது முரண் தெரிவிப்பு (Adverse) சான்றிதழ் என்ற வகையில் வருடாந்திர கணக்குகளுக்கு தணிக்கை அறிக்கையில் சான்றளிக்கப்படுகிறது.

**தணிக்கை முன்னேற்றம்**

75. 2021-2022 ஆம் ஆண்டிற்கான அனைத்து ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள், மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் தணிக்கைப் பணி முடிவடைந்துள்ளது. 2022-2023 ஆம் ஆண்டிற்கான ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள் மற்றும் 20%+2% கிராம ஊராட்சிகளின் தணிக்கைப் பணி முடிவடைந்துள்ளது. 31.05.2024

அன்றைய நாளில் தணிக்கை முன்னேற்றம் குறித்து கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

| நிறுவனங்களின் வகைகள் | நிறுவனங்களின் எண்ணிக்கை | தணிக்கை முடிக்கப்பட்டது | தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்டது | தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட வேண்டியது |
|---|---|---|---|---|
| மாநகராட்சிகள் | 21 | 21 | 14 | 7 |
| நகராட்சிகள் | 138 | 138 | 122 | 16 |
| பேரூராட்சிகள் | 490 | 488* | 488 | - |
| மாவட்ட ஊராட்சிகள் | 36 | 36 | 36 | - |
| ஊராட்சி ஒன்றியங்கள் | 388 | 388 | 388 | - |
| கிராம ஊராட்சிகள் | 2819 | 2819 | 2819 | - |
| பல்கலைக்கழகங்கள் | 23 | 23 | 12 | 11 |
| இதர நிறுவனங்கள் | 95 | 95 | 89 | 6 |

* பாலக்கோடு பேரூராட்சி தணிக்கைப் பணி நடைபெற்று வருகிறது. மற்றும் ஆலம்பாளையம் பேரூராட்சியின் கணக்குகள் மற்றும் ஆவணங்கள் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநர் அலுவலகத்தில் உள்ளதால் தணிக்கை தொடங்கப்படவில்லை.

**தணிக்கைத் தடைகள் மீதான தீர்வு**

(i) தணிக்கை அறிக்கைகள் மீது தொடர் நடவடிக்கை எடுப்பது இத்துறையின் மிக முக்கிய பணியாகும். தணிக்கையின் போது சுட்டிக்காட்டப்பட்ட முறைகேடுகள், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் / நிறுவனங்களின் நிருவாக அதிகாரிகளின் கவனத்திற்கு உடனடியாக கொண்டு செல்லப்படுகின்றன. தணிக்கை அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள கடுங்குறைபாடுகள் மற்றும் இழப்புகள் குறித்தும் அவற்றின் மீதான தொடர் நடிவடிக்கைகளுக்காக அரசு மற்றும் சம்பந்தப்பட்ட நிருவாகத் துறைத் தலைவர்களுக்கு மாதாந்திர பருவ வெளியீடுகள் மற்றும் சிறப்பு அறிக்கைகள் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

(ii) சாதாரண நிகழ்வுகளில், தணிக்கைத் தடைகளுக்கான பதில்கள் சரிபார்க்கப்பட்டு, உரிய விளக்கம் அளிக்கப்படும் நிலையில், தடைகள் தீர்வு செய்யப்படும். மேலும், தணிக்கைத் தடைகளை தீர்வு செய்வது குறித்து தொடர்புடைய நிருவாகத் துறைகளால்

ஏற்பாடு செய்யப்படும் கூட்டமர்வுகள் மூலம் இத்துறையின் மண்டல மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர்களால் தணிக்கைத் தடைகள் தீர்வு செய்யப்படுகிறது. உரிய விளக்கத்தின் அடிப்படையில் தலத்தீர்வு செய்யப்படுகிறது.

(iii) அண்மைக் காலத்தில் ஒரு நன்முயற்சியாக, உள்ளாட்சி நிருவாக அலுவலர்களுடன் தணிக்கை துவங்கும் முன் மற்றும் தணிக்கை முடிவுறும் நிலையில் கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டு தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

**மாவட்ட உயர்நிலை மற்றும் மாநில உயர்நிலைக் குழுக்களை உருவாக்குதல்**

76. ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தொடர்பான தணிக்கைத் தடைகளை தீர்வு செய்ய மாவட்ட உயர்மட்டக் குழுக்கள் மற்றும் மாநில உயர்மட்டக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. 01.04.2023 முதல் 30.04.2024 வரை

நடைபெற்ற மாவட்ட உயர்நிலைக் குழுக் கூட்டங்களின் விவரங்கள் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | முடிவுற்ற கூட்டங்களின் எண்ணிக்கை | தீர்வு செய்யப்பட்ட பத்திகளின் எண்ணிக்கை | மொத்த மதிப்பு ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | மாநகராட்சிகள் | 4 | 321 | 9201.90 |
| 2 | பேரூராட்சிகள் | 2 | 44 | 116.94 |
| 3 | ஊராட்சி ஒன்றியங்கள் | 49 | 1243 | 4887.78 |

**தணிக்கை அல்லாத பிற பணிகள்**

77. சட்டப்பூர்வ தணிக்கைச் செயல்பாடுகளைத் தவிர, உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கு பின்வரும் சிறப்பு பணிகள் அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

i. உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு மானியங்கள் மற்றும் கடன்கள் வழங்குவதற்கு, ஆண்டு கணக்குகளுக்கு சான்றளித்தல்.

ii. ஒன்றிய அரசு / மாநில அரசு / நிதி வழங்கும் முகமைகளிடமிருந்து பெறப்பட்ட மானியங்களுக்கான பயன்பாட்டு சான்றிதழ்கள் வழங்குதல்.

iii. உள்ளாட்சி நிறுவனப் பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பலன்கள் அனுமதித்தல் மற்றும் வழங்குதல்.

iv. உள்ளாட்சி நிறுவன ஓய்வூதியதாரர்களின் குறைகளை தீர்வு செய்தல்.

v. நகராட்சி ஓய்வூதியதாரர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியதாரர்களின் மருத்துவ நல நிதித் திட்டம் மற்றும் குடும்ப பாதுகாப்பு நிதித் திட்டம் ஆகியவற்றினை நிருவகித்தல்.

vi. உள்ளாட்சி நிறுவனப் பணியாளர்களின் பொது சேம நலநிதி இறுதி இருப்புகள் மற்றும் வைப்புத் தொகைகளுக்கான வட்டி அனுமதித்தல்.

vii. அறக்கட்டளைகளின் பொருளாளராக, அறக்கட்டளை மற்றும் நிதியங்களை நிருவகித்தல்.

viii. உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட நிலுவைகளை சரிபார்த்தல் மற்றும் சான்றளித்தல்.

**சட்டமன்றத்தில் ஒருங்கிணைந்த தணிக்கை அறிக்கை சமர்ப்பித்தல்**

78. தமிழ்நாடு உள்ளாட்சி நிதி தணிக்கை சட்டம், 2014 இன் பிரிவு 20-ன்படி, உள்ளாட்சி நிதி தணிக்கை இயக்குநரால் ஆண்டுதோறும் தணிக்கை மேற்கொள்ளப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகளின் ஒருங்கிணைந்த அறிக்கையை சட்டமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

| வ. எண் | அறிக்கை ஆண்டு | சட்டப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட நாள் |
|---|---|---|
| 1) | 2015-2016 | 09.07.2018 |
| 2) | 2016-2017 | 05.02.2021 |
| 3) | 2017-2018 | 13.09.2021 |
| 4) | 2018-2019 | |
| 5) | 2019-2020 | 24.03.2022 |
| 6) | 2020-2021 | 19.04.2023 |
| 7) | 2021-2022 | 22.02.2024 |

## திறன் மேம்பாடு

79. உள்ளாட்சி நிதித் தணிக்கையாளர்களுக்கு தணிக்கை சார்ந்த நவீனயுத்திகளை அறிந்து கொள்வதற்கும் தணிக்கை தரம் மேம்பாடு அடையவும் ஆண்டுதோறும் புத்தாக்க பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

80. நிதித்தணிக்கை, இணைக்கத் தணிக்கை, செயலாக்கத் தணிக்கை, தகவல் தொழில்நுட்பத் தணிக்கை உட்பட பல்வேறு குறுகிய கால பயிற்சித் திட்டங்கள் அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரி மூலம் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன. 2023-2024 ஆம் ஆண்டில் 107 தணிக்கையாளர்களுக்கு மேற்காணும் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

## சிறப்பு முன்னெடுப்புகள்

### (i) மின் அலுவலக நடைமுறை (e-office)

வெளிப்படைத் தன்மையுடன் கோப்புகளின் மீதான நடவடிக்கைகளை துரிதப்படுத்த மின் அலுவலக நடைமுறை பயன்பாட்டிலுள்ளது.

**(ii)உள்ளாட்சி அமைப்பு ஓய்வூதியதாரர்களுக்கு இணைய வழி வசதிகள்**

உள்ளாட்சி நிறுவனங்களான நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சிகளின் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களின் வாழ்வு சான்றிதழ்களை ஜீவன் பிரமாண் இணையதளம் (இந்திய போஸ்ட் பேமெண்ட்ஸ் வங்கி (ஐபிபிபி) மூலம் பதிவேற்றம் செய்யவும், இ-சேவை மையங்கள் மூலம் குடும்ப ஓய்வூதியத்திற்கு விண்ணப்பிக்கவும், அதனை பதிவிறக்கம் செய்யவும், வாழ்வு சான்றிதழை பதிவேற்றவும், ஒரு புதிய முயற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

**தணிக்கைக் கட்டணம்**

81. உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டத்தின் 17வது பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள கட்டண விகிதப்படி தணிக்கைக் கட்டணம் தணிக்கை நிறுவனங்களால் செலுத்தப்படுகிறது. 01.04.2023 முதல் 30.04.2024 வரை உள்ளாட்சி அமைப்புகள் / நிறுவனங்களால், 1364.90 இலட்சம் ரூபாய் தணிக்கைக் கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது.

## கூட்டுறவுத் தணிக்கைத் துறை

82. தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983-ன் கீழ் பதிவு பெற்ற 15 நிருவாகப் பதிவாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கூட்டுறவு நிறுவனங்களின் சட்டப்பூர்வ தணிக்கையை மேற்கொள்வதற்காக கூட்டுறவுத் தணிக்கைத் துறை உருவாக்கப்பட்டது.

**தணிக்கைக்கான ஆதாரம்**

83. தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் பிரிவு 80 (தணிக்கை) மற்றும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகள் 1988, விதி எண் 102 மற்றும் 103 இவற்றில் பதிவாளருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களில், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983 பிரிவு 72 மற்றும் 80-ன் கீழ் உள்ள அதிகாரங்கள் கூட்டுறவுத் தணிக்கை இயக்குநருக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன சட்டப்பூர்வ அதிகாரத்தின்படி பதிவு பெற்ற கூட்டுறவு நிறுவனங்களின் (பால் கூட்டுறவு நிறுவனங்கள் தவிர்த்து)

தணிக்கையை மேற்கொள்வது கூட்டுறவுத் தணிக்கை இயக்குநரின் சட்டப்பூர்வ கடமையாகும்.

84. அரசாணை (நிலை) எண்.10, கூ.உ(ம)நு.பா. துறை, நாள்.31.01.2013-ன் வாயிலாக திருத்திய விதிகளின் படி கீழ்கண்ட நிறுவனங்களின் கணக்குகள் தணிக்கை நிறுவனங்களால் (Audit Firms) தணிக்கை செய்யப்படுகிறது.

- தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி (TNSACB)
- மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மற்றும்
- அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படும் சங்கங்களின் தணிக்கை

மேற்சொன்ன கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகர கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றின் உடன்நிகழ்தணிக்கை (Concurrent Audit) கூட்டுறவுத் தணிக்கைத் துறை தணிக்கையாளர்களாலும், சட்டப்பூர்வ தணிக்கை பட்டயக் கணக்காளர்களாலும் மேற்கொள்ளப்படுகிறது.

## தணிக்கை செய்யப்படும் நிறுவனங்கள்

| வ. எண். | நிருவாகப் பதிவாளர்களின் விவரம் | கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை 2023-2024 |
|---|---|---|
| 1. | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 8460 |
| 2. | மீன்-வளத் துறை இயக்குநர் | 1403 |
| 3. | கைத்தறி இயக்குநர் | 1355 |
| 4. | தலைமைச் செயல் அலுவலர், பனைப்பொருள் வளர்ச்சி வாரியம் | 734 |
| 5. | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டு வசதி) | 708 |
| 6. | தொழில் மற்றும் வணிகத் துறை ஆணையர் | 298 |
| 7. | தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் | 173 |
| 8. | சமூகநலன் மற்றும் மக்கள் உரிமைத் துறை இயக்குநர் | 125 |
| 9. | கால்நடைப் பராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிகள் ஆணையர் | 110 |
| 10. | வேளாண் பொறியியல் மற்றும் சேவை கூட்டுறவு சங்கங்களின் இயக்குநர். | 67 |
| 11. | ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை இயக்குநர் | 49 |
| 12. | பட்டு வளர்ச்சித் துறை இயக்குநர் | 25 |
| 13. | சர்க்கரைத் துறை ஆணையர் | 17 |
| 14. | துணி நூல் இயக்குநர் | 7 |
| 15. | வேளாண்மைத் துறை இயக்குநர் (எண்ணெய் வித்துக்கள்) | 1 |
| | **மொத்தம்** | **13532** |

**தணிக்கை செயல்திறன்**

85. நிதியாண்டு முடிந்த பின்பு கணக்குகள் இறுதியாக்கம் செய்த பின்னரே தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி 2022-2023 ஆம் ஆண்டிற்கான மொத்தம் உள்ள 13,532 சங்கங்களில் 5443 கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை 2023-2024 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை 31.07.2024-க்குள் முடிக்கப்படும். தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983-இன் பிரிவு 81-ன் கீழ் விசாரணையில் உள்ளவை, வணிக குற்றப் புலனாய்வுத் துறை விசாரணையில் உள்ளவை, நீதிமன்ற வழக்கு காரணமாக புத்தகங்கள் கிடைக்கப் பெறாதவை, மற்றும் கணக்கு எழுதப்படாமல் உள்ளவை போன்ற காரணங்களினால் சில சங்கங்களின் தணிக்கை நிலுவையாக உள்ளது. இச்சங்கங்களின் தணிக்கையை முடிக்க சம்பந்தப்பட்ட நிருவாகத்துறை அலுவலர்களின் ஒருங்கிணைப்புடன் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**தனி அறிக்கைகள்**

86. தணிக்கையில் கையாடல், மோசடி, கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதி மீறல், இருப்பு குறைவு ஆகிய கடுங்குறைகள் கண்டறியும் போது அனைத்து விவரங்களும் தனி அறிக்கைகள் மூலம் சம்பந்தப்பட்ட நிருவாகப் பதிவாளருக்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ள உடன் தெரிவிக்கப்படுகிறது.

ஐந்து ஆண்டுகளுக்கான தனி அறிக்கைகள் விவரம் பின்வருமாறு:-

| வருடம் | தனி அறிக்கைகள் எண்ணிக்கை | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 2019-2020 | 544 | 47.95 |
| 2020-2021 | 484 | 87.61 |
| 2021-2022 | 380 | 52.40 |
| 2022-2023 | 326 | 45.52 |
| 2023-2024 | 570 | 47.47 |

**தணிக்கைத் தடைகள் மீதான தீர்வு**

87. தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் 1983, பிரிவு 80(7)-ன் படி “தணிக்கையின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடு எதனையும், தணிக்கை முடிவு தெரிவிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் பதிவு செய்யப்பட்ட சங்கம், குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் மற்றும் அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்துப் பதிவாளருக்குத் தெரிவிக்க வேண்டும்.”

88. தற்போது பணமதிப்பு சாராத 700817 பத்திகள் கண்டறியப்பட்டு அவற்றில் 68840 பத்திகளை சம்பந்தப்பட்ட இணைப்பதிவாளர் / துணைப்பதிவாளர் மற்றும் நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து தீர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

89. தணிக்கைக்கான மனித நாட்கள் மற்றும் தணிக்கை பணியாளரின் பதவி நிலை இவற்றின்

அடிப்படையில் தணிக்கை கட்டணம் கணக்கீடு செய்யப்படுகிறது. அடிப்படை விதிக் கட்டணமும் தணிக்கை பணியாளரின் பதவி நிலைக்கேற்ப ஓய்வூதிய பங்களிப்புடன் சேர்ந்த மாதாந்திர சராசரித்தொகை அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுகிறது.

**தணிக்கைக் கட்டணம் மற்றும் அடிப்படை விதி கட்டணம் பெற்ற விவரம்**

**(ரூபாய் கோடியில்)**

| வருடம் | தணிக்கைக் கட்டணம் | அ.வி. கட்டணம் |
|---|---|---|
| 2019-2020 | 2.87 | 13.82 |
| 2020-2021 | 4.83 | 15.56 |
| 2021-2022 | 3.85 | 15.95 |
| 2022-2023 | 4.40 | 17.73 |
| 2023-2024 | 5.61 | 14.45 |

## திறன் மேம்பாடு

90. கூட்டுறவுத் தணிக்கையாளர்களுக்கு தணிக்கை சார்ந்த நவீன யுத்திகளை அறிந்து கொள்வதற்கும் தணிக்கை தரம் மேம்பாடு அடையவும் ஆண்டுதோறும் புத்தாக்க பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

91. நிதித்தணிக்கை, இணைக்கத் தணிக்கை, செயலாக்கத் தணிக்கை, தகவல் தொழில்நுட்ப தணிக்கை உட்பட பல்வேறு குறுகிய கால பயிற்சிகள், அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரி மற்றும் இதர கூட்டுறவு பயிற்சி நிலையங்கள் வாயிலாக ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன. 2023-2024 ஆம் ஆண்டில் 202 தணிக்கையாளர்களுக்கு மேற்காணும் பயிற்சிகள் வழங்கப்பட்டு உள்ளது.

## சிறப்பு முன்னெடுப்புகள்

- செயல்திறன் தணிக்கைக்கான தலைப்புகள் கண்டறியப்பட்டுள்ளன. இனி வரும் காலங்களில் இதற்கு அதிமுக்கியத்துவம் வழங்கப்படும்.

- தணிக்கை மேற்கொள்ளும் நிறுவனங்களில் குறைந்த இடர் மற்றும் வியாபார நடவடிக்கைகள் குறைவாக உள்ள சங்கங்களை கண்டறிந்து தணிக்கை நடைமுறையை எளிதாக்கி சரிபார்ப்பு பட்டியல் வாயிலாக விரைந்து தணிக்கை முடித்திட ஆக்கப்பூர்வ முயற்சிகள் அறிமுகப்படுத்தப்படும்.

## மாநில அரசு தணிக்கைத் துறை

92. அரசு வணிகத் திட்டங்களின் கணக்குகளை உட்தணிக்கை செய்யும் பொருட்டு உள்ளாட்சி நிதிக் கணக்குகளின், ஆராய்வாளர் (Examiner) அரசு வணிகத் திட்டங்களின் தலைமை தணிக்கையராக அரசால் 1945-ம் ஆண்டில் நியமனம் செய்யப்பட்டார். அரசாணை (நிலை) எண். 449, நிதித்துறை, நாள். 03.05.1969-ன் படி அரசு வணிக திட்டங்கள் தொடர்புடைய கணக்குகளை தணிக்கை செய்யும் பொருட்டு தலைமை தணிக்கையரின் கட்டுப்பாட்டின் கீழ் புதிய துறை உருவாக்கப்பட்டது.

93. அரசாணை (நிலை) எண்.598, நிதி (உ.நி)த் துறை, நாள்.03.08.1992-இல் உள்ளாட்சி நிதித் தணிக்கை

மற்றும் தலைமை தணிக்கையர், அரசு வணிக திட்டங்கள் ஆகிய துறைகளின் செயல்பரப்பு மறுசீரமைக்கப்பட்டு தலைமை தணிக்கையர், அரசு வணிக திட்டங்கள் என்ற பதவி தலைமை அரசுத்துறை நிறுவனத் தணிக்கையர் மற்றும் சட்டபூர்வ வாரியங்களின் தணிக்கையர் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அரசாணை (நிலை) எண்.264. நிதி(உ.நி)த்துறை, நாள்.16.08.2019-இன்படி அரசுத்துறை நிறுவனத் தணிக்கைத் துறை என்பது மாநில அரசு தணிக்கைத் துறை என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

**தணிக்கைக்கான ஆதாரம்**

94. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், தமிழ்நாடு வக்ஃப் வாரியம், தமிழ்நாடு தொழிலாளர் நலவாரியம் முதலிய சட்டபூர்வ வாரியங்களின் சட்டபூர்வ தணிக்கையினை அந்தந்த நிறுவனங்களின் சட்ட விதிகள் அல்லது அரசாணைகளின் கீழ் தணிக்கை செய்யும் பணி மாநில அரசு தணிக்கைத் துறை வசம் அரசால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண்.15

மற்றும் 16. உயர்கல்வி(டி2)த் துறை, நாள்.05.02.2024-இன்படி அனைத்து அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் தணிக்கை மாநில அரசு தணிக்கைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

95. அரசாணை (நிலை) எண்.598, நிதி (உ.நி)த் துறை, நாள். 03.08.1992 மற்றும் அரசாணை (நிலை) எண்.736, நிதி(உ.நி)த் துறை, நாள். 19.09.1995-இன் வழி அரசு துறைகளின் உட்தணிக்கை செயல்பாட்டினை மதிப்பாய்வு செய்யவும் மற்றும் சம்மந்தப்பட்ட துறைகள் மேற்கொள்ளும் உட்தணிக்கையினை மேற்பார்வையிடவும் மாநில அரசு தணிக்கைத் துறைக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

**தணிக்கை செய்யப்படும் நிறுவனங்கள்**

96. தமிழ்நாடு அரசு பல்வேறு அரசாணைகள் மற்றும் வாரிய சட்டங்களின் கீழ் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் மூலம் பல்வகை நிறுவனங்களின் தணிக்கை மேற்கொள்ளும் பணியை மாநில அரசு தணிக்கைத் துறைக்கு கட்டாயமாக்கியுள்ளது.

இத்துறையின் வரம்பின் கீழ் உள்ள வாரியங்கள், திட்டங்கள் மற்றும் நிறுவனங்களின் பட்டியலை இணைப்பு எண்-1-இல் காணலாம். மேலும், பின்வரும் துறைகளின் உட்தணிக்கை இத்துறையினால் மேற்கொள்ளப்படுகிறது.

- மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறை
- மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை
- பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்து துறை
- வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை
- தொழில்நுட்பக் கல்வித் துறை
- சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை
- வனத்துறை
- காவல் துறை
- வேளாண்மை பொறியியல் துறை

**தணிக்கை நோக்கம்**

97. வாரியங்கள் / நிறுவனங்களின் அனைத்து வரவு மற்றும் செலவினங்களை முறையான ஆய்வு மற்றும் தணிக்கை மேற்கொள்ளுதல், தணிக்கை நிறுவனங்களில் அனைத்து நிதி பரிவர்த்தனைகளும் நிதி ஒழுக்க கோட்பாடுகளின்படி அமைந்துள்ளதா என சரிபார்த்தல், அரசு அறிவித்துள்ள உரிய விதிமுறைகள் சரியாக பின்பற்றப்படுவதை உறுதிசெய்தல், வாரியப் பணியாளர்களின் ஓய்வூதியப் பயன்கள் மற்றும் பொது வருங்கால வைப்பு நிதி / சிறப்பு சேமநல நிதித் திட்ட இறுதி இருப்புத் தொகைகள் ஆகியவற்றினை ஆய்வு செய்து தணிக்கைச் சான்று வழங்குதல், மற்றும் வாரியங்கள் / நிறுவனங்களின் தணிக்கை தடைகளில் உள்ள கடுங்குறைபாடுகள் குறித்த அறிக்கையினை தொடர்ந்து கண்காணித்து பொது நிறுவனங்கள் குழுவில் இறுதித் தீர்வு நிறைவேறும் வரை கண்காணித்தல் ஆகிய பொறுப்புகள் மாநில அரசு தணிக்கைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அரசு உதவிபெறும்

நிறுவனங்களின் மானியங்களுக்கு மானிய தகுதிச் சான்றளித்தல் பணியையும் இத்துறை மேற்கொள்கிறது.

**தணிக்கை செயல்திறன்**

98. **தணிக்கை நிறுவனங்களின் தணிக்கை நிலை விவரம், 31.03.2024 அன்றைய நிலையில் இணைப்பு-II-இல் விவரிக்கப்பட்டுள்ளது.**

**தணிக்கைத் தடைகள் மீதான தீர்வு**

99. வாரியங்கள் நீங்கலாக மற்ற தணிக்கை நிறுவனங்களில், தணிக்கைத் தடைகளுக்கான பதில்கள் சரிபார்க்கப்பட்டு, உரிய விளக்கம் அளிக்கப்படும் நிலையில், கூட்டமர்வின் மூலம் தணிக்கைத் தடைகள் இத்துறையின் மாவட்ட அலுவலர்களால் தீர்வு செய்யப்படும். சட்டபூர்வ வாரியங்களை பொருத்தமட்டில், கடுங்குறைபாட்டுப் பத்திகள் பொது நிறுவனக் குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்டு அக்குழுவினாலே தீர்வு செய்யப்படுகின்றன. இப்பத்திகளை தவிர்த்து மற்ற பத்திகள் இத்துறையால் தீர்வு செய்யப்படுகின்றன.

## தணிக்கைக் கட்டணம்

100. தணிக்கை அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட வருவாய் இழப்பு 1342.52 இலட்சம் ரூபாய், கூட்டமர்வின் மூலம் 12,997 தணிக்கைத் தடைகள் தீர்வு செய்யப்பட்டதின் அடிப்படையில் மீளப் பெறப்பட்டு வாரிய / அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

101. உண்மைச் செலவினம் அல்லது சராசரி செலவுகளின் அடிப்படையில் தணிக்கை கட்டணத்திற்கான கேட்பு எழுப்பப்படுகிறது. 2023-2024 ஆம் ஆண்டிற்கு 677.10 இலட்சம் ரூபாய் தணிக்கை கட்டணமாக பெறப்பட்டுள்ளது.

## திறன் மேம்பாடு

102. மாநில அரசு தணிக்கைத் துறை தணிக்கையாளர்கள் தணிக்கை சார்ந்த நவீனயுத்திகளை அறிந்து கொள்வதற்கும் தணிக்கை தரம் மேம்பாடு அடையவும் ஆண்டுதோறும் புத்தாக்க பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

2023-2024 ஆம் ஆண்டில் 65 தணிக்கையாளர்களுக்கு செயல்திறன் தணிக்கை, தகவல் தொழில்நுட்பத் தணிக்கை உள்ளிட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

**சிறப்பு முன்னெடுப்புகள்**

103. வழக்கமாக மேற்கொள்ளப்படும் தணிக்கை நடைமுறையானது, இணக்கத் தணிக்கையில் அதிக கவனம் செலுத்தும் நிலையில், அரசுத் திட்டத்தின் குறிக்கோள்கள் அரசுத் துறை மற்றும் வாரியங்களால் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்ய செயல்திறன் தணிக்கை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை

104. பால் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பூர்வ தணிக்கைப் பணியினை மேற்கொள்ள, பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை 1987 ஆம் ஆண்டு தனித்துறையாக உருவாக்கப்பட்டது. அரசாணை (நிலை) எண்.370, நிதி (கூட்டுறவுத் தணிக்கை)த் துறை, நாள் 22.11.2019-ன் படி, பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை, நிதித்துறையின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

**தணிக்கைக்கான ஆதாரம்** :

105. தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983-ன் பிரிவு 80(1) (ஏ)ன் படி அரசால் நியமிக்கப்பட்ட தணிக்கையாளர் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் 1988இல் விதி எண்.101 மற்றும் 102-இல் கூறப்பட்ட விதிமுறைகளை பின்பற்றி பால் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகள் நிதியாண்டில் ஒருமுறையாவது தணிக்கை செய்யப்பட வேண்டும்.

106. பால் கூட்டுறவுத் தணிக்கைத் துறை இயக்குநர், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பிரிவு 80 மற்றும் விதிகள் 101, 102 மற்றும் 103-ல் கூறப்பட்டுள்ள விதிமுறைகளை பதிவாளர் (தணிக்கை) ஆக செயல்படுத்த அனைத்து அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளது. அரசாணை எண்.467 கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை, நாள் 05.09.1990 மூலம் சட்டப் பிரிவு 80 மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் 101, 102 மற்றும் 103-ன்படி பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்கள் இயக்குநர் மற்றும் இயக்குநருக்கு கீழ் பணிபுரியும் இணை இயக்குநர், மண்டல துணை இயக்குநர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**தணிக்கைச் செயல்முறை:**

107. தணிக்கைச் செயல்முறையானது, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ள தணிக்கை வரம்புகளின்படி தணிக்கை நோக்கங்களை தீர்மானித்தல், திட்டம் வகுத்தல், தணிக்கையாளர்களை தணிக்கை செய்ய இருக்கும் சங்கங்களுக்கு ஒதுக்கீடு செய்தல்,

தணிக்கைப் பணி மேற்கொள்ளுதல், தணிக்கை சான்றறிக்கைகளை வெளியிடுதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

**நிருவாக அமைப்பு:**

108. தமிழ்நாட்டில் பால் கூட்டுறவுச் சங்கங்கள் மூன்று அடுக்கு அமைப்பாக, மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் 1, மாவட்ட அளவிலான 27 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள், பிரதம அளவில் 10633 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் 47 நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அதன்படி, பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை முதுநிலைத் தணிக்கையாளர்கள் மற்றும் உதவி இயக்குநர்களைக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது.

**தணிக்கை நோக்கம்** :

109. தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983 பிரிவு 80 மற்றும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் 1988, விதி 101, 102 மற்றும் 103-ன் படி தணிக்கையாளரால் சட்டப்பூர்வத் தணிக்கை மற்றும் இணைக்கத் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளில் உறுப்பினர்களின் பொருளாதார நலன் மற்றும் கூட்டுறவுக் கொள்கைகள் கடைபிடிக்கப்படுவதை ஆய்வு செய்யும் பரந்த பொறுப்பு கூட்டுறவுத் தணிக்கையாளருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

110. கூட்டுறவுச் சங்கத்தால் வழங்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில், இலாப, நட்ட கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு ஆகியவை பரிசீலனை செய்த பின்னர், உரிய தரவுகள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின் அடிப்படையில்

- இருப்பு நிலை குறிப்பானது, நிதி ஆண்டின் இறுதியில் சங்கத்தின் உண்மையான மற்றும்

நியாயமான செயல்பாடுகளின் நிலையை தெரியப்படுத்துகிறதா

- இலாப அல்லது நட்ட கணக்கானது, நிதி ஆண்டில் உண்மையான இலாபம் அல்லது நட்டத்தை தெரியப்படுத்துகிறதா

என தணிக்கையாளர் தனது கருத்தினை அறிக்கையாக அளித்திடல் வேண்டும்.

- தணிக்கை கீழ்க்கண்டவற்றையும் உள்ளடக்கியது

  i) நீண்ட காலமாக நிலுவையிலுள்ள கடன்களை ஆய்வு செய்தல்

  ii) ரொக்க கையிருப்பு மற்றும் பத்திரங்களை சரிபார்த்தல்

  iii) சங்கத்தின் சொத்து மற்றும் பொறுப்புகளை கணக்கிடுதல்

- கூட்டுறவுச் சங்கத்தின் விதிகள் 1988 விதி 102-ன் படி தணிக்கையாளர் கீழ்கண்ட இனங்களை ஆய்வு

செய்து தணிக்கை குறைகளை தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்ட வேண்டும்.

i) சட்டம் மற்றும் விதிகள் அல்லது சங்கத்தின் துணை விதிகளுக்கு முரணாக காணப்படும் அனைத்து நடவடிக்கைகள்;

ii) சங்கத்தால் கொண்டு வரவேண்டிய அனைத்து தொகைகளும் ஆனால், கணக்கில் கொண்டு வரப்படாதவை;

iii) முக்கிய முறைகேடு அல்லது முறையற்ற செலவினம் அல்லது சங்கத்திற்கு வரவேண்டிய தொகைகளை வசூலிப்பதில் முறைகேடு;

iv) தணிக்கை மேற்கொள்ளும் சங்கத்திற்கு ஏதேனும் தொகை அல்லது சொத்து, வாரா அல்லது ஐயக் கடனாக காணப்படுவது;

v) இது தொடர்பாக பதிவாளருக்கு (தணிக்கை) தேவைப்படும் வேறு ஏதேனும் தகவல்;

**தணிக்கைச் செயல்திறன்:**

**தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்**

111. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் 2022-2023 தணிக்கையாண்டிற்கான இறுதித் தணிக்கை 12 அலகுகளிலும் நிறைவு பெற்று தணிக்கைச் சான்று வழங்கப்பட்டுள்ளது.

112. 2022-2023 ஆம் ஆண்டுக்கான இறுதி தணிக்கை 19 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் முடிக்கப்பட்டுள்ளது.

**மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள்**

**(15-5-2024 வரை)**

| வ. எண் | தணிக்கை ஆண்டு | மொத்த ஒன்றியங்கள் | தணிக்கை முடிக்கப்பட்டவை | தணிக்கை நிலுவை | | | தணிக்கைச் சான்று வழங்கப்பட்டவை | தணிக்கைச் சான்று வழங்குவதில் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | தணிக்கை முன்னேற்றம் | புத்தகங்கள் எழுதப்படாதவை | மொத்தம் | | |
| 1 | 2020-2021 | 25 | 24 | - | 1 | 1 | 24 | 1 |
| 2 | 2021-2022 | 25 | 24 | - | 1 | 1 | 22 | 2 |
| 3 | 2022-2023 | 27 | 19 | 1 | 7 | 8 | 18 | 1 |

## பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை (15-5-2024 வரை)

| வ. எண் | தணிக்கை ஆண்டு | மொத்த சங்கங்கள் | தணிக்கை முடிக்கப்பட்டவை | தணிக்கைச் சான்று வழங்கப்பட்டவை | தணிக்கைச் சான்று வழங்குவதில் நிலுவை | நிலுவை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2018-2019 | 9857 | 9856 | 9855 | 1 | 1 (1 சங்கத்தில் புத்தகம் எழுதப்படவில்லை) |
| 2 | 2019-2020 | 10081 | 9994 | 9991 | 3 | 87 (63 சங்கங்களில் புத்தகங்கள் எழுதப்படவில்லை) |
| 3 | 2020-2021 | 10382 | 9897 | 9866 | 31 | 485 (411 சங்கங்களில் புத்தகங்கள் எழுதப்படவில்லை) |
| 4 | 2021-2022 | 10565 | 8533 | 8335 | 198 | 2032 (1736 சங்கங்களில் புத்தகங்கள் எழுதப்படவில்லை) |
| 5 | 2022-2023 | 10654 | 6014 | 4906 | 1108 | 4640 (3523 சங்கங்களில் புத்தகங்கள் எழுதப்படவில்லை) |

**தணிக்கை முன்னேற்றம்**

| தணிக்கை ஆண்டு | தணிக்கை செய்யப்படும் மொத்த நிறுவனங்களின் எண்ணிக்கை | தணிக்கை செய்யப் பட்டவை | தணிக் கை நிலுவை |
|---|---|---|---|
| 2018-19 | 9886 | 9885 | 1 |
| 2019-20 | 10116 | 10029 | 87 |
| 2020-21 | 10417 | 9931 | 486 |
| 2021-22 | 10600 | 8567 | 2033 |
| 2022-23 | 10693 | 6045 | 4648 |

**தணிக்கைப் பத்திகள்**

113. சட்டம் / விதிகள், சங்கத் துணை விதிகள், அரசாணைகள் ஆகியவற்றிற்கு முரணான செயல்பாடுகள், நிதி முறைகேடுகள், ரொக்கம் / சரக்கிருப்பு குறைவு, சங்கத்திற்கு வர வேண்டிய பணம் நிலுவை, தவறான நிதி மேலாண்மை ஆகியவை தணிக்கை ஆய்வின்போது கண்டறியப்பட்டு தணிக்கை பத்தியாக இறுதித் தணிக்கை அறிக்கையில் குறைகள் தொகுப்பில் முன்னிலைப்படுத்தப்படும். 30.04.2024 வரை 948.38 கோடி ரூபாய் மதிப்புள்ள **14413** தணிக்கை மறுப்பினங்கள் நிலுவையில் உள்ளன.

**தணிக்கை தடைகள் மீதான தீர்வு**

114. அரசாணை எண்.11 கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை (பா.உ-1), நாள் 13.10.1991-ன்படி மூன்றடுக்கு பால் கூட்டுறவுச் சங்கங்களில் ஒவ்வொரு அடுக்குக்கும் தணிக்கை மறு ஆய்வு குழு அமைக்கப்பட்டு தடைகள் ஆய்வு செய்யப்பட்டு தணிக்கை தடைகள் தீர்வு செய்து குழுவால் முடிவு எடுக்கப்படுகிறது.

**(தொகை ரூ. இலட்சத்தில்)**

| வ. எண் | அலகின் பெயர் | தணிக்கை பத்திகளின் எழுப்பபட்டவை | | தணிக்கை பத்திகள் தணிக்கை மறு ஆய்வு குழுவில் நிவர்த்தி செய்யப்பட்டவை | | தணிக்கை பத்திகள் நிலுவை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | மொத்த எண்ணிக்கை | தொகை |
| 1 | பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் | 18635 | 15889.47 | 8049 | 7450.18 | 10586 | 8439.29 |
| 2 | மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் | 3645 | 67262.4 | 35 | 100.57 | 3610 | 67161.83 |
| 3 | தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் | 247 | 20191.76 | 30 | 954.34 | 217 | 19237.42 |
| | **மொத்தம்** | **22527** | **103343.63** | **8114** | **8505.09** | **14413** | **94838.54** |

**தணிக்கைக் கட்டணம் மற்றும் அடிப்படைவிதிக் கட்டணம்**

115. 2023-2024 ஆம் நிதியாண்டில் தணிக்கைக் கட்டணமாக 196.80 இலட்சம் ரூபாயும், அடிப்படை விதி கட்டணமாக 137.10 இலட்சம் ரூபாயும் பால் கூட்டுறவு சங்கங்களிலிருந்து வசூலிக்கப்பட்டு மொத்தம் 333.90 இலட்சம் ரூபாய் அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

**தனியறிக்கை**

116. தணிக்கையில் காணப்படும் கடுங்குறைகள் மற்றும் நிதிசார்ந்த அனைத்து விவரங்களும் தனியறிக்கைகள் மூலம் இயக்குநர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத்துறை மற்றும் பால் வளத்துறை துணைப் பதிவாளர்களுக்கு உரிய நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது.

**கடந்த 4 ஆண்டுகளில் தனியறிக்கைகளின் முன்னேற்ற விவரங்கள் பின்வருமாறு- (30-04-2024 வரை)**

**i. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்**

| தணிக்கையாண்டு | தனியறிக்கைகளின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 2018-2019 | 6 | 3674.44 |
| 2019-2020 | 9 | 12076.06 |
| 2020-2021 | 9 | 16268.75 |
| 2021-2022 | 8 | 11003.74 |
| **மொத்தம்** | **32** | **43022.99** |

**ii. மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள்**

| தணிக்கையாண்டு | தனியறிக்கைகளின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 2018-2019 | 20 | 8300.68 |
| 2019-2020 | 20 | 10028.12 |
| 2020-2021 | 20 | 3807.12 |
| **மொத்தம்** | **60** | **22135.92** |

### iii. பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்

| தணிக்கையாண்டு | தனியறிக்கைகளின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 2018-2019 | 367 | 730.76 |
| 2019-2020 | 877 | 412.04 |
| 2020-2021 | 656 | 57.37 |
| 2021-2022 | 68 | 26.88 |
| **மொத்தம்** | **1968** | **1227.05** |

117. தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களின் 2022-2023 ஆம் ஆண்டிற்கான தனியறிக்கைகள் தயார்செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## திறன் மேம்பாடு

118. பால் கூட்டுறவு தணிக்கைத் துறையின் தணிக்கையாளர்களுக்கு, துறை சார்ந்த திறனை

மேம்படுத்துவதற்காக அரசின் நிதியுதவியுடன் ஒவ்வொரு ஆண்டும் புத்தாக்கப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

119. தணிக்கை சார்ந்த இனங்களான, நிதித் தணிக்கை, இணக்கத் தணிக்கை, செயல்திறன் தணிக்கை, தொழில் நுட்பத் தணிக்கை, பணித் தணிக்கை, ஒப்பந்த சட்டத் தணிக்கை, ஒப்பந்தப்புள்ளி சட்டம் மற்றும் பால்வளம் பொருளாதாரம் ஆகியவை குறித்து 118 தணிக்கையாளர்களுக்கு 2023-2024 ஆம் ஆண்டில் குறுகிய கால பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**சிறப்பு முன்னெடுப்புகள்**

- வருடாந்திர பயிற்சி திட்டத்தின்படி இளநிலை மற்றும் நடுநிலை தணிக்கையாளர்களுக்கு பயிற்சிகள் வழங்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. பால் கூட்டுறவுகளின் தணிக்கை தொடர்பான குறிப்பிட்ட இனங்களில் (Domain Specific Areas) அனுபவம் வாய்ந்த தணிக்கையாளர்களைக் கொண்டு பயிற்சிகள்

வழங்க பயிற்சி தொகுதிகள் (Training Modules) தயாரிக்கப்பட்டுள்ளன.

- **செயல்திறன் தணிக்கை (Performance Audit) கீழ்க்கண்ட தலைப்புகளில் துவக்கப்பட்டுள்ளது.**
  - அ) இல்லம் தேடி கால்நடை மற்றும் அவசர சுகாதார சேவைகள்.
  - ஆ) தானியங்கி பால் சேகரிப்பு அலகுகளின் செயல்திறன்.
- **பால் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுத்திவரும் "ஒருங்கிணைந்த பால்வளம் மேலாண்மை திட்டத்தின் (IDMS)" செயல்பாடு குறித்து தகவல் தொழில்நுட்ப தணிக்கை (IT Audit) துவக்கப்பட்டுள்ளது.**

## இந்து சமய அறநிறுவனங்களின் தணிக்கைத் துறை

120. இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் நேரடிக் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வந்த தணிக்கைப் பிரிவு, நிதித்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இத்துறையின் துறைத் தலைவராக செயல்படுவதற்கு இயக்குநர் என்ற புதிய பணியிடம் உருவாக்கப்பட்டுள்ளது.

**தணிக்கை ஆதாரம்**

121. அற நிறுவனங்களின் கணக்குகளின் மீதான தணிக்கை மேற்கொள்ளுதல் தொடர்பாக 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கொடைகள் சட்டப்பிரிவு 87(2) மற்றும் சட்டப்பிரிவு 116(2)(xiv)ன் கீழ் இயற்றப்பட்ட விதிகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

122. இந்து சமய அறக்கொடைகள் சட்டம் மற்றும் விதிகள் தவிர பிற முக்கிய ஒழுங்குமுறைகள் பின்வருமாறு:

- உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் தணிக்கை கையேடு - தொகுதி V

- இந்து சமய அறநிலையத் துறையின் கணக்குகள் கையேடு

- அரசாணைகள், இந்துசமய அறநிலையத் துறை ஆணையர் மற்றும் இந்துசமய அறநிறுவனங்களின் தணிக்கைத் துறை இயக்குநர் ஆகியோரின் சுற்றறிக்கைகள் மற்றும் ஆணைகள்.

**தணிக்கையின் நோக்கம்**

123. இந்துசமய அற நிறுவனங்களின் தணிக்கையின் போது கீழ்க்காணும் இனங்கள் சரிபார்க்கப்படுகின்றன.

(i) முதலீடுகள், பத்திரங்கள் மற்றும் கட்டணச் சீட்டுகள் நேரடியாக சரிபார்க்கப்படுகிறது.

(ii) உரியகாலத்தில் வருவாய் ஈட்டப்படுகிறதா என சரிபார்க்கப்படுகிறது.

(iii) நீண்டகால நிலுவைகளை வசூலிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதா என சரிபார்க்கப்படுகிறது.

(iv) பெறப்பட்ட அனைத்து வரவினங்களும் உடனுக்குடன் கணக்கில் வரவு வைக்கப்பட்டு வங்கியில் செலுத்தப்படுகிறதா என சரிபார்க்கப்படுகிறது.

(v) அனைத்து செலவினங்களுக்கும் உரிய செலவு சீட்டுகள் உள்ளதா என சரிபார்க்கப்படுகிறது.

(vi) மேலோட்டமான ஆய்வினிலேயே ஏதேனும் செலவினம் தேவைக்கு அதிகமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதா என சரிபார்க்கப்படுகிறது.

**தணிக்கை செய்யப்படும் அற நிறுவனங்கள்**

124. பல்வேறு விதமான இந்துசமய அற நிறுவனங்களில் நிதி மற்றும் இணக்கத் தணிக்கைகள் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

- அற நிறுவனங்களின் பொதுக் கணக்குகள்
- மடங்கள் மற்றும் அவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட அறக்கட்டளைகளின் பொதுக் கணக்குகள்
- ஒருகாலபூஜை மற்றும் அன்னதானத் திட்டக் கணக்குகள்
- திருப்பணிக் கணக்குகள்
- கிராமப்புறத் திருக்கோயில் திருப்பணிக் கணக்குகள்
- ஆதி திராவிடர் கிராம கோயில்களின் திருப்பணிக் கணக்குகள்
- அற நிறுவனங்களால் நடத்தப்படும் கல்வி நிறுவனங்களின் கணக்குகள்
- இந்துசமய அறநிலையத் துறை ஆணையரால் பேணப்படும் நிதிகள்
- யானைகள் முகாம் கணக்குகள்
- பலவகை கணக்குகள் – (சுற்றுலா பொருட்காட்சி, அன்பு இல்லம் மற்றும் கருணை இல்லம் கணக்குகள்)

125. மேலும், தணிக்கை மேற்கொள்ளப்படும் அற நிறுவனங்கள் அதன் ஆண்டு நிகர வருமானத்திற்கு ஏற்றவாறு பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டு தணிக்கைக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

| வ. எண் | பிரிவு | வரிவிதிப்புக்குரிய ஆண்டு வருமானம் | தணிக்கை மேற்கொள்ளப்படும் அறநிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | பிரிவு – 1 | ரூ.1 கோடிக்கு மேல் | 163 |
| 2 | பிரிவு – 2 | ரூ.50 லட்சம் முதல் ரூ.1 கோடி வரை | 97 |
| 3 | பிரிவு – 3 | ரூ.10 லட்சம் முதல் ரூ.50 லட்சம் வரை | 612 |
| 4 | பிரிவு – 4 | ரூ.1 லட்சம் முதல் ரூ.10 லட்சம் வரை | 2240 |
| 5 | பிரிவு – 5 | ரூ.10,000/- முதல் ரூ.1 லட்சம் வரை | 3105 |
| 6 | பிரிவு – 6 | ரூ.1000/- முதல் ரூ.10,000/- வரை | 2611 |
| 7 | ஒருகாலபூஜை திட்டம் | - | 11365 |
| 8 | அன்னதானத் திட்டம் | - | 743 |
| 9 | கல்வி நிறுவனம் | - | 22 |
| 10 | பலவகை கணக்குகள் (சுற்றுலா பொருட்காட்சி அரங்குகள் கணக்கு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை ஆணையரால் பராமரிக்கப்படும் நிதி கணக்குகள்) | - | 12 |
| மொத்தம் | | | 20970 |

**தணிக்கைத் துறையின் அமைப்பு**

126. அறநிறுவனங்களின் கணக்குகளின் மீதான தணிக்கையை மேற்கொள்ளவும் மற்றும் எளிய ஒருங்கிணைப்பிற்கும் என இந்து சமய அறநிலையத்துறையின் மண்டலங்களுக்கு இணையாக இந்து சமய அறநிறுவனங்களின் தணிக்கை துறையானது 19 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இவற்றில் துணை தலைமை தணிக்கை அலுவலர் தலைமையில் 4 மண்டலங்களும், மண்டல தணிக்கை அலுவலர் தலைமையில் 15 மண்டலங்களும் செயல்பட்டு வருகிறது. மேற்படி துணைத் தலைமைத் தணிக்கை அலுவலர் மற்றும் மண்டல அலுவலர்களுக்கு உதவி புரிய 28 உதவி தணிக்கை அலுவலர்களும், ஒரு மண்டலத் தணிக்கை அலுவலர் (நடமாடும் தணிக்கைக்குழுவும்) செயல்பட்டு வருகின்றனர்.

## தணிக்கை செயல்திறன்

127. கடந்த மூன்று ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட தணிக்கைகளின் விபரங்கள்

| வ. எண். | ஆண்டு | தணிக்கை முடிக்கப்பட்ட அறநிறுவனங்களின் எண்ணிக்கை விபரம் | | | | தணிக்கை முடிக்கப்பட்ட பசலிகளின் கூடுதல். |
|---|---|---|---|---|---|---|
| | | பிரிவு 1 | பிரிவு 2 | பிரிவு 3 | பிரிவு 4 | |
| 1 | 2021-2022 | 600 | 496 | 872 | 3595 | 5563 |
| 2 | 2022-2023 | 799 | 647 | 1290 | 2106 | 4842 |
| 3 | 2023-2024 (மாற்றியமைக்கப்பட்ட அறநிறுவனங்களின் வகைப்பாடுகளின்படி) | 174 | 85 | 464 | 1349 | 2072 |

## தணிக்கைத் தடைகள் மீதான தீர்வு

128. 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையத்துறை சட்டப் பிரிவு 90-ன்படி தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளைக்

களைதல் மற்றும் அறங்காவலர்கள் மீது தண்டத் தொகை நிர்ணயம் செய்தல் ஆகியவை இந்து சமய அறநிலையத்துறையின் ஆணையர், இணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர் ஆகியோரின் அதிகார வரம்பிற்கு உட்பட்டதாகும்.

129. முதுநிலை திருக்கோயில்களின் தணிக்கைத் தடைகளை தீர்வு செய்திட இரண்டு நிலைகளிலான தணிக்கைக்குழு அரசாணை (நிலை) எண்: 114, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்களின் துறை, நாள்: 31.05.2023-ன்படி அமைக்கப்பட்டுள்ளது. அதன்விவரங்கள் பின்வருமாறு:-

I. முதல் நிலை தணிக்கைக் குழு (இணை ஆணையர் / செயல் அலுவலர் நிலையில் நிர்வகிக்கப்படும் முதுநிலை திருக்கோயில்களின் தணிக்கைத் தடை தீர்வு பணிகளுக்காக)

| | | |
|---|---|---|
| 1 | ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை | தலைவர் |
| 2 | தலைமை தணிக்கை இயக்குநரால் அங்கீகரிக்கப்படும் சம்பந்தப்பட்ட துறையின் அலுவலர் | உறுப்பினர் / செயலாளர் |
| 3 | அரசு இணைச் செயலாளர், நிதித் துறை | உறுப்பினர் |

## II. இரண்டாம் நிலை தணிக்கைக்குழு (துணை ஆணையர்/செயல் அலுவலர் மற்றும் உதவி ஆணையர்/செயல் அலுவலர் நிலையில் நிர்வகிக்கப்படும் முதுநிலை திருக்கோயில்களின் தணிக்கை தடை தீர்வு பணிகளுக்காக)

| | | |
|---|---|---|
| 1 | கூடுதல்ஆணையர்(நிருவாகம்), இந்து சமய அறநிலையத்துறை | தலைவர் |
| 2 | தலைமை தணிக்கை இயக்குநரால் அங்கீகரிக்கப்படும் சம்பந்தப்பட்ட துறையின் அலுவலர் | உறுப்பினர் / செயலாளர் |
| 3 | சம்பந்தப்பட்ட துறை துணை தலைமை தணிக்கை அலுவலர்/ மண்டல தணிக்கை அலுவலர், இந்து சமய அறநிறுவனங்களின் தணிக்கைத் துறை | உறுப்பினர் |

2023-2024 ஆம் ஆண்டில் 218,15,22,000 ரூபாய் அளவிற்கான 1,03,707 தணிக்கை மறுப்புகள் இத்துறையின் தணிக்கை அலுவலர்களால் எழுப்பப்பட்டுள்ளது. மேலும் 4,97,27,000 ரூபாய் அளவிற்கான 8,008 தணிக்கை மறுப்புகள் உரிய தீர்வு அலுவலர்களால் தீர்வு செய்யப்பட்டுள்ளது.

**தணிக்கை கட்டணம் வசூல்**

130. 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டப்பிரிவு 92(2)-இன் கீழ் அறநிறுவனங்களுக்கான தணிக்கைக் கட்டணம் விதிக்கப்பட்டு பின்வரும் விகிதாச்சாரத்தின்படி வசூலிக்கப்படுகிறது.

| வ. எண் | நிகர வருமானம் | தணிக்கை கட்டணம் சதவீதம் |
|---|---|---|
| 1 | ரூ.5,000/- வரை | ஏதுமில்லை |
| 2 | ரூ.5,001/- முதல் ரூ.5,00,000/- வரை | 1.5 சதவீதம் |
| 3 | ரூ.5,00,001/-க்கு மேல் | 4 சதவீதம் |

- **இத்துறையின் செலவினமானது, மாநிலத்தின் ஒருங்கிணைந்த நிதியத்திலிருந்து முதலில் மேற்கொள்ளப்பட்டு அச்செலவினம் பின்னர் இந்து சமய அறநிலையத்துறை ஆணையரால் வசூலிக்கப்படும் தணிக்கைக் கட்டணத்தின் மூலம் திரும்ப செலுத்தப்பட்டு வருகிறது.**

- 2023-2024 ஆம் **ஆண்டிற்கான தணிக்கைக் கட்டண வசூல் விவரம் பின்வருமாறு :**

| **நிதியாண்டு** | **வசூலிக்கப்பட்ட தணிக்கை கட்டணம் ரூபாய்** |
|---|---|
| 2023-2024 | 63,26,57,147/- |

## திறன் மேம்பாடு

131. 2023-2024 **ஆம் நிதியாண்டிற்கு இத்துறை தணிக்கையாளர்களுக்கு கீழ்க்காணும் விவரப்படி தணிக்கை மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.**

| வ. எண் | பயிற்சி விவரங்கள் |
|---|---|
| 1. | செயல்திறன் தணிக்கை பயிற்சி |
| 2. | கட்டுமானப் பணிகள் தணிக்கை பயிற்சி |
| 3. | தகவல் தொழில்நுட்ப தணிக்கை பயிற்சி |
| 4. | ஒப்பந்த தணிக்கை மற்றும் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தள்ளி சட்டம் குறித்த பயிற்சி |
| 5. | இந்து சமய அறநிறுவனங்களின் தணிக்கை |

## சிறப்பு முன்னெடுப்புகள்

132. அறநிறுவனங்களின் கணக்குகள் மீதான வழக்கமான தணிக்கைப் பணிகளுடன் கூடுதலாக, 2023-2024 ஆம் ஆண்டில் புதியதாக செயல்திறன் தணிக்கை மேற்கொள்வதை அறிமுகப்படுத்தி தணிக்கை அலகுகளின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்து, அவை குறிப்பிட்ட இலக்குகளை அடையும் வகையில் செயல்படுகிறதா என்பதை தீர்மானிக்கும் வகையில் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

133. **அங்கீகரிக்கப்பட்ட தணிக்கைப் பணித் திட்டத்தின்படி பின்வரும் தலைப்புகளின் கீழ் செயல்திறன் தணிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

- **அறநிறுவனங்களின் சொத்துகள் மேலாண்மை மீதான செயல்திறன் தணிக்கை**
- **திருவிழா நடத்துதல் தொடர்பான செயல்திறன் தணிக்கை**
- **அன்னதானம் தொடர்பான செயல்திறன் தணிக்கை**
- **ஒருகால பூஜை தொடர்பான செயல்திறன் தணிக்கை**

## தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் (TNIDB)

- தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டுச் சட்டம் 2012-இன் கீழ் தோற்றுவிக்கப்பட்ட இவ்வாரியம் மாநிலத்தில் உட்கட்டமைப்பு வளர்ச்சி நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதுடன், பொதுத் துறைகள் வாயிலாகவும் மற்றும் அரசு தனியார் பங்களிப்பு முறையின் வாயிலாகவும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வகை செய்கிறது.

- இவ்வாரியத்தின் தலைவராக முதலமைச்சரும் (அலுவல்வழி) மற்றும் துணைத்தலைவராக நிதிஅமைச்சரும் (அலுவல்வழி) இருப்பர். இவ்வாரியத்தில் தலைமைச்செயலர் தலைமையில் நிருவாகக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியசட்டம் 2012-இன் கீழ் தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதித் திட்டங்களின் வடிவமைப்பு, மேம்பாடு, செயல்பாடு, நிருவாகம், மேலாண்மை ஆகியவற்றை எளிதாக்க நிதி உதவி அளிக்கிறது.

திட்டதயாரிப்பு நிதி ஆய்வுகள் நடத்துதல், நிபுணர்கள் மற்றும் ஆலோசகர்களின் சேவைகளை அமர்த்துவது, சாத்தியக்கூறு ஆய்வுகள், விரிவான திட்ட ஆய்வுகள், திறன் மேம்பாடு, ஆராய்ச்சி போன்ற நோக்கங்களுக்காக நிதி உதவி அளிக்கிறது.

- மாநிலத்தில் உள்கட்டமைப்பு மேம்பாட்டில் தனியார் துறையின் பங்களிப்பை ஊக்குவிக்கவும், எளிதாக்கவும், திறந்த சந்தையில் இருந்து வல்லுநர்களை பணியமர்த்தி உள்ளது. வாரியத்தின் நடைமுறைகளை எளிதாக்குதல், அதிகாரப் பகிர்வை மேம்படுத்துதல் மற்றும் இது தொடர்பான சட்ட திருத்தங்கள் ஆகியவற்றை மேற்கொண்டு வாரியத்தை அரசு வலுப்படுத்திவுள்ளது.

- இதுவரை தலைமைச் செயலகத்தில் இயங்கி வந்த இவ்வாரியம், தற்போது தேவையான அலுவலர்கள் மற்றும் வல்லுநர்களோடு தனி அலுவலகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. மேலும் தனியார் பங்களிப்புடன்

திட்டங்கள் செயல்படுத்தப்படக் கூடிய வாய்ப்புகள் அதிகமுள்ள முக்கிய துறைகளுக்கு உதவி செய்வதற்காக வாரியத்தின் மூலமாக வல்லுநர்களை பணியமர்த்துவதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த வல்லுநர்கள் பொருத்தமான திட்டங்களைக் கண்டறிதல், ஆலோசகர்களை பணியமர்த்தல், ஆவணத்தயாரிப்பில் உதவி செய்தல், மற்றும் வாரியத்தின் ஒப்புதல்களை விரைவாகப் பெறுவதற்கு ஒருங்கிணைத்தல் போன்ற பணிகளில் துறைகளுக்கு உதவி புரிவார்கள். மேலும் வாரியத்தின் புதிய இணையதளம் நவீன வசதி மற்றும் வடிவமைப்புடன் தொடங்கப்பட்டுள்ளது.

- ஜனவரி 2024-ல் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கீழ்க்கண்ட அறிக்கைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது,

- பொது தனியார் பங்களிப்புக் கொள்கை
- தமிழ்நாடு 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தின் தொலைநோக்கு அறிக்கை.

- பின்வரும் உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தால் திட்டக் கட்டமைப்பு மற்றும் ஒப்பந்த ஆவணங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
  - பொது தனியார் பங்களிப்பு முறையில் எருக்கூரில் சைலோ வசதியினை நிர்வகித்தல் மற்றும் பராமரித்தல்.
  - பொது தனியார் பங்களிப்பு முறையில் கிளாம்பாக்கம் புதிய பேருந்து நிலையத்தின் செயல்பாடு மற்றும் பராமரிப்பு.
  - HAM முறையில் அடையாறு ஆற்றினை மறுசீரமைப்பு செய்வதற்கான திட்டம்.

- சென்னை நகரின் மண்டலம் 5, 6 மற்றும் 9 க்கு உட்பட்ட இடங்களில் பொது வசதிக்கான கழிப்பறை மற்றும் ஓய்வறைகள் நிறுவுதல்.

- கடலூர் துறைமுகத்திற்கான துறைமுக செயல்பாட்டாளரை தேர்ந்தெடுத்தல்.

- தமிழ்நாட்டில் 7 மாநகராட்சியில் Bio CNG முறையில் திடக்கழிவு ஆலைகளை பொது தனியார் பங்களிப்பு முறையில் அமைத்தல் (கோயம்புத்தூர், சேலம், திருச்சி, தாம்பரம், மதுரை, நாகர்கோவில் மற்றும் திருப்பூர்).

- ஆண்டுக்கு 25000 மெட்ரிக் டன் கிராஃபைட் உற்பத்தி செய்யும் புதிய ஆலையை உருவாக்குதல்

- 500 தாழ்தள மின்சாரப் பேருந்துகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் மற்றும் அதற்கான மின்சாதனக் கட்டுமானங்களை உருவாக்குதல்.

- தமிழ்நாடு உள்கட்டமைப்பு முதலீட்டாளர்கள் மாநாடு – [இலட்சியம் மற்றும் வாய்ப்புகள்] முன்னணி நிதிகள் நிதி நிறுவனங்கள் மற்றும் உள்கட்டமைப்புத் துறையில் முதலீட்டாளர்களுடன் தொடர்பு கொள்வதற்காக உள்கட்டமைப்புக்கென தமிழகத்தின் பார்வையை வெளிப்படுத்தவும், முக்கிய பங்குதாரர்களின் முன்னோக்கைப் புரிந்து கொள்ளவும் 29.05.2024-ல் நடைபெற்றது.

**சென்னை மாநகர கூட்டாண்மை கட்டம்- I :**

**(நீடித்த நகர்ப்புற சேவைகள் திட்டம்)**

134. சென்னை மாநகர கூட்டாண்மை கட்டம் - I தமிழ்நாடு அரசினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான மொத்தச் செலவினம் 701 மில்லியன் டாலர் ஆகும். இதில் உலக வங்கி (WB) மற்றும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் பங்களிப்புகள் தலா 150 மில்லியன் டாலர் ஆகும். தமிழ்நாடு

உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் திட்டக் கண்காணிப்பு முகமையாக ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புப் பணியினை மேற்கொள்கிறது. முதன்மைச் செயல் அலுவலர், தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் அவர்கள் இதன் திட்ட இயக்குநர் ஆவார். திட்டச் செயலாக்க நடவடிக்கைகள் மற்றும் வழங்கல் சார்ந்த குறியீடு சாதனைகள் கீழ்க்கண்ட முகமைகளின் பொறுப்பாகும்.

- பெருநகர சென்னை மாநகராட்சி
- சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்
- மாநகர் போக்குவரத்து கழகம்
- நீர்வளத்துறை
- சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து ஆணையம்

திட்டத் தொடக்கம் முதல் இதுநாள் வரை, பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னைப் பெருநகர குடிநீர்

வழங்கல், மற்றும் கழிவுநீரகற்று வாரியம், மாநகர் போக்குவரத்துக் கழகம் மற்றும் சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து ஆணையம் ஆகியவற்றின் வழங்கல் சார்ந்த சாதனை முடிவிற்கான மொத்தத் தொகையாக 68.62 மில்லியன் அமெரிக்க டாலர்கள் அடையப்பட்டுள்ளது. இதற்காக, உலக வங்கியின் பங்காக 283.9683 கோடி ரூபாய் மற்றும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் பங்காக 284.56 கோடி ரூபாய், ஆக மொத்தம் 568.5283 கோடி ரூபாய் நிதியினை ஒன்றிய அரசானது தமிழக அரசுக்கு விடுவித்துள்ளது.

மேலும், அடையப்பெற்றுள்ள வழங்கல் சார்ந்த சாதனைகளின் அடிப்படையில், உலக வங்கி மற்றும் ஆசிய உள்கட்டமைப்பு வளர்ச்சி முதலீட்டு வங்கி ஆகியவற்றிடமிருந்து 4.10 மில்லியன் அமெரிக்க டாலர்கள் ஒன்றிய அரசின் மூலமாக விடுவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் (TNIFMC)

135. தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தால் (TNIDB) தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் (TNIFMC) என்கிற சொத்து மேலாண்மை நிறுவனம் நிறுவப்பட்டது. இந்நிறுவனம், மாநிலத்திற்கு முதலீடுகளை ஈர்ப்பதன் மூலம் வணிகம், தொழில்துறை மற்றும் வணிகத் துறைகளில் தமிழகத்தின் தலைமையை வலுப்படுத்துவது, பொறுப்பான பொருளாதார வளர்ச்சி அடைவது மற்றும் வேலை வாய்ப்புகளை மேம்படுத்தவும் நிறுவப்பட்டது. இந்நிறுவனத்தின் 49 சதவிகித பங்குகளை தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியமும் 51 சதவிகித பங்குகளை நிதி நிறுவனங்களும் வைத்துள்ளன. இந்திய பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தால் (SEBI) ஒழுங்குபடுத்தப்படும். இந்நிறுவனம், தமிழ்நாடு உறைவிட நிதி (Tamil Nadu Shelter Fund) மற்றும் தமிழ்நாடு வளர்ந்து வரும் துறை விதை நிதியம்

(Tamil Nadu Emerging Sector Seed Fund) ஆகிய நிதிகளை மேலாண்மை செய்து வருகிறது.

**தமிழ்நாடு உறைவிட நிதி (TNSF)**

136. தமிழ் நாடு உறைவிட நிதி, உலக வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கியின் ஆதரவுடன், மலிவு விலை வீட்டுத் திட்ட நிதியில் (வாடகை மற்றும் விற்பனை ஆகிய இரண்டு மாதிரிகளிலும்) கவனம் செலுத்துகிறது. இந்த நிதி 658 கோடி ரூபாய் உறுதி செய்யப்பட்ட மூலதனத்தை கொண்டுள்ளது. இந்த நிதி பணிபுரியும் பெண்கள் விடுதிகள் மற்றும் தொழில்துறை வீட்டுத் திட்டங்கள் உள்ளிட்ட நான்கு மலிவு விலை வீட்டுத் திட்டங்களில் முதலீடு செய்ய 291 கோடி ரூபாய் நிதியை ஒப்புதல் அளித்துள்ளது. 578 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை இந்த நிதி மதிப்பீடு செய்து வருகிறது.

**தமிழ்நாடு வளர்ந்து வரும் துறை விதை நிதியம் (TNESSF).**

137. தமிழ்நாடு வளர்ந்து வரும் துறை விதை நிதி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ஜனவரி 27, 2023 அன்று முறையாக தொடங்கப்பட்டு ஐந்து புத்தொழில் நிறுவனங்களுக்கு 13.4 கோடி ரூபாய்க்கான அனுமதி ஆணைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் வழங்கினார். தமிழ்நாடு வளர்ந்து வரும் துறை விதை நிதியம் (TNESSF), வளர்ந்து வரும் துறைகளை மையமாகக் கொண்டு, மேம்பாட்டு மூலதன (Venture Capital) முதலீடுகள் வடிவில் இடர் மூலதனத்தை வழங்குகிறது. இந்த நிதியானது தமிழக அரசு, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) மற்றும் டைடல் பூங்கா (TIDEL Park) ஆகியவற்றிலிருந்து 100 கோடி ரூபாய் உறுதி செய்யப்பட்ட மூலதனத்தைக் கொண்டுள்ளதுடன் மேலும் நிறுவன முதலீட்டாளர்களிடமிருந்து 400 கோடி ரூபாய் திரட்டுகிறது. இன்று வரை, இந்நிதி 27.4 கோடி ரூபாய் மதிப்பிலான எட்டு முதலீடுகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

## தமிழ்நாடு பசுமை காலநிலை நிதி (TNGCF)

138. தமிழகத்தில் பசுமை உள்கட்டமைப்பில் முதலீடுகளை அதிகரிக்க, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையானது "தமிழ்நாடு பசுமை காலநிலை நிதி (TNGCF)" என்ற நிதியை அமைக்க 100 கோடி ரூபாயை உறுதி செய்துள்ளது. 2,000 கோடி ரூபாய் முதலீட்டு இலக்குடன் கூடிய இந்நிதி தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனத்தால் நிர்வகிக்கப்படும். பல மேம்பாட்டு நிதி நிறுவனங்கள் இந்த நிதியில் ஒத்துழைக்க விருப்பம் தெரிவித்துள்ளன.

## தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (TNIDF)

139. மேலும் உள்கட்டமைப்பில் தனியார் துறை பங்களிப்பை ஈர்க்கும் வகையில், 8,000 கோடி ரூபாய் இலக்கு கொண்ட "தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (TNIDF)" என்ற புதிய நிதியில் 1,000 கோடி ரூபாய் முதலீடு செய்ய தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் (TNIDB) மூலம் அரசாங்கம் உறுதியளித்துள்ளது. இது, மாநிலத்தில் தனியார் துறை முதலீடுகளை

விரைவுபடுத்தும். உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான திட்டங்களை ஆதரிப்பதற்காக தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் (TNIDB), தேசிய முதலீடு மற்றும் உள்கட்டமைப்பு நிதி (NIIF) உடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

**தங்கம் தென்னரசு**

நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்

துறை அமைச்சர்

# இணைப்புகள்

## இணைப்பு –1

## மாநில அரசுத் தணிக்கைத் துறையால் தணிக்கை செய்யப்படும் முக்கியமான நிறுவனங்கள் / திட்டங்களின் விவரம்

1. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்
2. தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்
3. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்
4. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்
5. கதர் கிராமத் தொழில் வாரியம்
6. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
7. சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்
8. முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு (சமூக பாதுகாப்பு) திட்டம்
9. நாட்டுப்புறக் கலைஞர் நல வாரியம்

10. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

11. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம்

12. 15 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்கள்

13. வேளாண்மை விரிவாக்க மையங்கள்

14. புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்ட தணிக்கை

15. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட தணிக்கை

16. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்வி உதவித்தொகை திட்டம்

17. அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரி

18. மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகுகள்

19. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

20. ஆசிரியர் தேர்வு வாரியம்

21. நிகர்நிலை பல்கலைக்கழகங்களின் நாட்டு நலப் பணித் திட்டம்

22. தமிழ்நாடு அரசு மருத்துவ உதவித் திட்டம்

23. குடும்பப் பாதுகாப்பு நல நிதி

24. மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதி

25. அரசு உதவி பெறும் தொழில்நுட்பப் பயிலகங்கள் (ம) பொறியியல் கல்லூரிகள்

26. பாராளுமன்ற / சட்டமன்றத் தேர்தல் செலவினத் தொகை

27. தமிழ்நாடு மாநிலத் தகவல் ஆணையம்

28. அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்

## இணைப்பு -2

## தணிக்கை நிலை விபரம் (31.03.2024 அன்றைய நிலையில்)

| வ. எண் | தணிக்கை நிறுவனங்களின் பெயர் | தணிக்கை முடிக்கப்பட்ட ஆண்டு | தணிக்கை நடப்பில் உள்ள ஆண்டு | எழுப்பப்பட்ட பத்திகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் | 2021-22 | 2022-23 | 480 |
| 2. | தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் | 2021-22 | 2022-23 | 614 |
| 3. | சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் | 2021-22 | 2022-23 | 603 |
| 4. | தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் | 2020-21 | 2021-22<br>2022-23 | 1460 |
| 5. | தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் | 2021-22 | 2022-23 | 1838 |
| 6. | தமிழ்நாடு வக்ஃபு வாரியம் | 2021-22 | 2022-23 | 1675 |
| 7. | நிர்வாகப் பேராட்சியர் | 2020-21 | 2021-22<br>2022-23 | 994 |
| 8. | பொறுப்பு சொத்தாட்சியர் | 2021-22 | 2022-23 | 1813 |
| 9. | நொடித்தோர் சொத்தாட்சியர் | 2020-21 | 2021-22<br>2022-23 | 1355 |
| 10. | சட்டப்பூர்வ கலைப்பாளர் | 2020-21 | 2021-22<br>2022-23 | 2402 |
| 11. | வேளாண்மை விரிவாக்க மையம் | 2021-22 | 2022-23 | 41773 |
| 12. | எடையளவு நிறுவனங்கள் | 2021-22 | 2022-23 | 15737 |

| வ. எண் | தணிக்கை நிறுவனங்களின் பெயர் | தணிக்கை முடிக்கப்பட்ட ஆண்டு | தணிக்கை நடப்பில் உள்ள ஆண்டு | எழுப்பப்பட்ட பத்திகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 13. | அரசு நிறுவனங்கள் | 2021-22 | 2022-23 | 81226 |
| 14. | அரசு உதவி பெறும் நிறுவனங்கள் | 2021-22 | 2022-23 | 20227 |
| 15. | அரசு உதவி பெறும் தொழில்நுட்பப் பயிலகங்கள் மற்றும் பொறியியல் கல்லூரிகள் | 2021-22 | 2022-23 | 6788 |
| 16. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் | 2021-22 | 2022-23 | 206523 |